GOKULAM

கோகுலம்

நவம்பர் 2002

ரூ.6/-



வீரேந்திர சேவக்
போஸ்டர் பக்.40




தீபாவளி டிரஸ் எப்படி?

வண்ணம் தீட்டுங்கள்!




வெடிச் சிரிப்பு!
தீபாவளி இனாம்!



கோகுலம்

மலர் : 20
இதழ் : 10

நவம்பர் 2002

வெடிச் சிரிப்பு ... 1
வாசனை அறிதல் - (செய்து பாருங்கள்) ... 3
ஓவியப் போட்டி முடிவுகள் ... 4
சுப்பம்மாவின் பேராசை ... 6
தித்திக்கும் தீபாவளி! ... 8
எங்கள் பள்ளியில் நடந்தது ... 10
நீண்ட தூரம் தாவும் வெட்டுக்கிளி ... 12
விளையாட்டு அரங்கம் ... 14
கண்டுபிடியுங்கள் ... 15
கதைகதையாம் காரணமாம் ... 16
புதிர் உலகம் ... 17
வினதையின் விடுதலை ... 18
பிரபலங்களின் வாழ்வில் ... 22
விடுகதைப் பக்கம் ... 24
கமகமக்கும் கோகோ ... 25
1000/- ரூபாய் பரிசுப் போட்டி ... 27
மாலா தேடிய மாயப் பெண் - (படக்கதை) ... 28
எங்கள் ஊரில் நடந்தது ... 32
காற்றினிலே வந்த செய்தி ... 34
கேட்கட்டுமா டாக்டர்? ... 38
வீரேந்திர சேவக் - போஸ்டர் ... 40
சார் தபால் ... 42
குறுக்கெழுத்துப் புதிர் ... 43
சின்னமனூர் சின்னப்பட்டாளம் ... 44
வலையில் சிக்கியவை ... 50
கர்ணனின் வலிமை - (படக்கதை) ... 52
அழகான ராஜா மலை - (சுற்றுலா அனுபவம்) ... 56
இடி, மின்னல், மழை - (அறிவியல் சித்திரமடல்) ... 58
நன்றி கெட்ட மனிதர்கள்! - (நகைச் சுவைக்கதை) ... 62
அகப்பட்டால் அதோ கதிதான்! ... 66
பரிசு ஜோக்ஸ் ... 68
1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு ... 70
தன் வினை ... 71
அடங்காப் பசி நோய் - (படக்கதை) ... 72
கோகுலம் நியூஸ் ... 75
எதிர் நீச்சல் போடலாமா? - (வியக்க வைக்கும் விளையாட்டு உலகம்) ... 76
நிலவுக்குச் செல்ல... - (பாடல்) ... 80

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

ஒவ்வொரு உணர்ச்சியும், நம்மைச் சுற்றி நடக்கும் செயல்பாடுகளை நமக்கு அறிவிக்கிறது. வாசனை அறிதல் அதிக செய்திகளை நமக்குத் தெரிவிக்கிறது.

என்னென்ன தேவை?

6 டம்ளர்கள், 6 விதமான வாசனைப் பொருட்கள், 6 கைக்குட்டைகள், 6 ரப்பர் பேண்ட், பேனா மற்றும் பேப்பர்.

எப்படி செய்வது?

1. நல்ல வாசனையுடைய காப்பித்தூள் வெங்காயம், எலுமிச்சை சாறு, பெருங்காயம், பலாச்சுளை, மல்லிகை ஆகியவற்றை எடுத்து 6 டம்ளர்களில் போடுங்கள். பிறகு ஒரு தாளில் டம்ளரில் உள்ள வாசனைப் பொருட்களின் பெயரை எழுதி டம்ளரின் வெளிப்புறத்தில் ஒட்டுங்கள். அதன் பின் கைக்குட்டையால் ஒவ்வொரு டம்ளரின் வாயையும் ரப்பர் பேண்ட் கொண்டு கட்டி விடுங்கள்.

வாசனை அறிதல்



செய்து பாருங்கள்

உங்கள் நண்பர்களையும், பெரியவர்களையும் அழைத்து கண்களை மூடியபடி ஒவ்வொருவரையும் வாசனையை நுகரச் சொல்லுங்கள்.

ஒவ்வொருவரும் எத்தனை வித வாசனைகளைச் சரியாகக் கண்டுபிடிக்கிறார்கள் என்பதை ஒரு தாளில் குறித்துக் கொள்ளுங்கள்.

வயது ஆக, ஆக வாசனை அறியும் திறனும் குறைகிறது. வயதானவர்கள் அதிக நேரம் முகர்ந்து பார்த்த பிறகுதான் வாசனை என்னவென்று சொல்ல முடிகிறது அல்லவா?

தண்ணீர் ஒரு தடுப்புச் சுவர்போல் வாசனை அறிதலில் செயல்படுகிறது. மேலே சொன்னபடி வாசனைப் பொருட்கள் உள்ள டம்ளர்களில் தண்ணீர் ஊற்றி முகர்ந்து பார்க்கச் சொல்லுங்கள். இப்போது அவர்களால் சரியாகச் சொல்ல முடியாது.

மனிதனுடைய வாசனை அறியும் திறன் விலங்குகளின் வாசனை அறியும் திறனை விட மிகவும் குறைவானது. ஒரு நாய் மூன்று கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள மற்றொரு நாயை மோப்பம் பிடித்து விடும். எலி தன் கூர்மையான வாசனை உணர்வு மூலம் இருட்டிலும் உணவுப் பொருட்களை அடையாளம் கண்டு விடும்.

வாண வேடிக்கை



முதல் பரிசு : **ரா.பிரஷாந்த்,**
ஆறாம் வகுப்பு,
ஜவஹர் வித்யாலயா, சென்னை.

மூன்றாம் பரிசு : **டி.ஜி.சிவப்ரியா,**
மாமல்லன் மெட்ரிக் பள்ளி, காஞ்சிபுரம்.





ஓவியப் போட்டி முடிவுகள்!

அக்டோபர் இதழில் 'வாண வேடிக்கை' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கு உங்கள் பார்வைக்கு...

இரண்டாம் பரிசு : **ரா.விஷால்,**
எட்டாம் வகுப்பு, ஜவஹர் வித்யாலயா,
சென்னை.

ஆறுதல் பரிசு : **பி.கார்த்திகா,**
சென்னை - 82.



ஆறுதல் பரிசு :
எஸ்.ஜெயலக்ஷ்மி
பதினோராம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப்
பள்ளி, ஆர்.கே.பேட்டை.



குன்றனூர் என்ற கிராமத்தில் சுப்பம்மா என்ற பேராசைக்காரி வாழ்ந்து வந்தாள். அவளுக்கு வேலன் என்று ஒரு மகன் இருந்தான். அவனுக்கு வள்ளியைத் திருமணம் செய்து வைத்தாள் சுப்பம்மா.

சுப்பம்மா எப்பொழுதும் வள்ளியுடன் சண்டை போட்டுக்கொண்டிருப்பாள். ஒரு நாள் வேலன் வேலை விஷயமாகப் பக்கத்து ஊருக்குச் சென்றான். உடனே சுப்பம்மா வள்ளியை அடித்து, வீட்டை விட்டுத் துரத்தி விட்டாள்.

வள்ளி கால் போன போக்கில் நடந்தாள். ஒரு காடு வந்தது. திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது. வள்ளி ஒதுங்க இடம் தேடினாள். ஒரு மரத்தில் இருந்த பெரிய பொந்து அவள் கண்ணில் பட்டது. உடனே பொந்துக்குள் சென்று உட்கார்ந்தாள் வள்ளி.

நள்ளிரவு நேரம். திடீரென்று இருவர் சிரிக்கும் சத்தமும், பேச்சும் கேட்டது.

சுப்பம்மாவின் பேராசை!



வள்ளி மிகவும் பயந்தாள். மெதுவாக வெளியே எட்டிப் பார்த்தாள். அந்த மரத்தின் மேல் இரண்டு அரக்கிகள் இருந்தனர்.

வள்ளிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. திடீரென்று அந்த மரம் பறக்கத் தொடங்கியது. காடு, மலைகளைக் கடந்து ஓரிடத்தில் மரம் இறங்கியது.

மரத்திலிருந்து அரக்கிகள்

இருவரும் இறங்கி, அருகில் இருந்த குகைக்குள் சென்றனர். வள்ளி மெதுவாக வெளியே வந்தாள்.

அந்த இடம் முழுவதும் தங்கமாக ஜொலித்தது. உடனே தன்னால் முடிந்த அளவு சிதறியிருந்த தங்கக் கட்டிகளை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டு மீண்டும் பொந்துக்குள் சென்று அமர்ந்தாள் வள்ளி.

அரக்கிகள் இருவரும் மரத்தில் ஏற மரம் பறந்து சென்று பழைய இடத்தில் நின்றது. அரக்கிகள் உடனே மறைந்தனர். வள்ளி ஓட்டமும் நடையுமாகத் தன் கிராமத்தை அடைந்தாள்.




வள்ளியைக் காணாமல் தவித்த வேலன், வள்ளியைக் கண்டதும் சந்தோஷமடைந்தான். தன் மடியிலிருந்த தங்கக் கட்டிகளை எடுத்துக் கொடுத்தாள் வள்ளி. பிறகு நடந்தது அனைத்தையும் கூறினாள்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட சுப்பம்மா அந்த மரத்தைத் தேடிக் கண்டுபிடித்து பொந்துக்குள் அமர்ந்து கொண்டாள். அரக்கிகள் வரவும் மரம் பறந்து சென்று தங்கப் பள்ளத்தாக்கில் இறங்கியது. அரக்கிகள் குகைக்குள் சென்றனர்.

சுப்பம்மா வேகமாக இறங்கி பெரிய, பெரிய தங்கக் கட்டிகளைத் தூக்க முயற்சி செய்தாள். இப்படி ஒவ்வொரு கட்டியாகத் தூக்கித் தூக்கிப் பார்க்கும்போதே அரக்கிகள் இருவரும் வந்துவிட்டனர்.

சுப்பம்மாவுக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. அரக்கிகள் இருவரும் சேர்ந்து சுப்பம்மாவை நையப்புடைத்தனர். பிறகு காட்டில் வீசி விட்டு மறைந்தனர். இரண்டு நாள் கழித்து நினைவு திரும்பிய சுப்பம்மா தன் பேராசையால் நிகழ்ந்த விபரீதத்தை எண்ணி, மனம் திருந்தி வீடு நோக்கி நடந்தாள்.

- எம். உமா மகேஸ்வரி,
பதினோராம் வகுப்பு,
தூய வளனார் மேல்நிலைப் பள்ளி,
நாகர்கோவில்.



தித்திக்கும் தீபாவளி!





'தீபாவளி' என்ற வார்த்தையைக் கேட்டதுமே எல்லோருக்கும் சந்தோஷம் ஏற்படும். பண்டிகைகளிலேயே தீபாவளி அதிக முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது. கண்களைக் கவர்ந்து, காதுகளைப் பிளக்கும் பட்டாசு, புத்தாடை, விதவிதமான பட்சணங்கள், விருந்தினர்கள் வருகை என்று தீபாவளியை நேசிக்கப் பல காரணங்கள் உள்ளன.

தமிழ்நாட்டில் மட்டுமன்றி தீபாவளி நம் நாட்டின் பல பகுதிகளிலும் கொண்டாடப்படுகிறது. நேபாளத்திலும்கூட தீபாவளியை விமரிசையாகக் கொண்டாடுகின்றனர். நாம் நரகாசுரனை வதம் செய்த நாளாகத் தீபாவளியைக் கொண்டாடுகிறோம். வட மாநிலங்களில் வியாபாரத்தைப் பெருக்கும் லக்ஷ்மி பூஜையாகப் போற்றப்படுகிறது. தொடர்ந்து ஐந்து நாட்களுக்குத் தீபங்களை ஏற்றி வைத்து சிறப்பு பூஜைகள் செய்து விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.

முன்பெல்லாம் இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பே தீபாவளியைப் பற்றிய எதிர்பார்ப்பும் பேச்சும் குழந்தைகளிடம் ஏற்பட்டு விடும். தீபாவளிக்காக தாத்தா, பாட்டி வீட்டுக்குப் போறோமா? அல்லது அவர்கள் நம் வீட்டுக்கு வருகிறார்களா? எந்த மாதிரியான உடை வாங்கலாம்? பட்டாசை மொத்தமாக சிவகாசியில் இருந்தே வாங்கி விடலாமா? என்று ஏகப்பட்ட கேள்விகள் பெரியவர்கள், சிறியவர்கள் மத்தியில் வலம் வந்து கொண்டிருக்கும். அம்மா, பாட்டிக்கோ இந்த வருடம் என்ன ஸ்வீட் செய்து அசத்தலாம் என்ற எண்ணம் ஓடிக் கொண்டிருக்கும். இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரியான எதிர்பார்ப்பு இருக்கும்.


தீபாவளி அன்று வீடு நிறைய உறவினர்களுடன், சந்தோஷத்தோடு பட்டாசு கொளுத்தி, புத்தாடை அணிந்து மனம்

நிறைய மகிழ்ச்சியோடு நண்பர்களுக்கு விருந்து படைத்து மகிழ்வார்கள்.

ஆனால் இன்று எல்லாமே இயந்திர கதியில் செய்யப்படுகிறது. ரெடிமேட் டிரஸ், கடைகளில் வாங்கிய பலகாரங்களுடன் அதிகம் மெனக்கெடாமல் தீபாவளி கொண்டாடப்படுகிறது. தீபாவளி அன்று உறவினர்கள், நண்பர்களை அழைப்பதோ அல்லது நாம் அவர்கள் வீட்டிற்குச் செல்வதோ கூட குறைந்துவிட்டது.

தீபாவளி அன்று வேகமாக வேலைகளை முடித்துவிட்டு, தொலைக்காட்சிகளில் மூழ்கி விடுகிறோம். எந்த சேனலில் எந்த நிகழ்ச்சி என்று ரிமோட்டுடன் ஒட்டு மொத்த குடும்பமே அதன் முன் அடிமையாகி விடுகிறோம். யாராவது வந்தால் கூட தொந்தரவாக நினைக்கக் கூடிய அளவிற்கு நம் மனநிலை மாறிவிட்டது.









தீபாவளி என்று இல்லை, எல்லா பண்டிகைகளுமே இப்படி மாறி வருகின்றன. எவ்வளவு ரூபாய்க்குப் பட்டாசு வெடித்தோம், எவ்வளவு உயர்ந்த துணி வாங்கினோம், எத்தனை கிலோ இனிப்பு வாங்கினோம் என்பது முக்கியமில்லை. நாம் பண்டிகையை எப்படி உறவினர்கள், நண்பர்களுடன் கலந்து மனம் நிறைய சந்தோஷத்துடன் கொண்டாடுகிறோம் என்பதே முக்கியம்.

பாதுகாப்பாக பட்டாசு வெடித்து, இல்லாதவர்களுக்கு உதவி செய்து இந்தத் தீபாவளியை மகிழ்ச்சியான, மறக்க முடியாத தித்திக்கும் தீபாவளியாகக் கொண்டாடுவோம்.

அட்டையில்: **ரோஷினி**

வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**




வியப்பூட்டிய சாமியார்!

பள்ளி வாசலில், "கணக்கு வாத்தியார் கணக்குப் போடச் சொல்லி அடிப்பார்... நான் பள்ளிக் கூடத்துக்குப் போக மாட்டேன்" எனச் சொல்லி தன் அம்மாவிடம் அழுது கொண்டிருந்தான் மூன்றாம் வகுப்புப் படிக்கும் பையன். அப்போது அங்கு சாமியார் ஒருவர் வந்தார். அதைப் பார்த்ததும் பையனின் அம்மா அவனிடம், "பள்ளிக்குப் போகாவிட்டால் இந்தப் பூச்சாண்டியிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன்" என்றார். அதற்கு அவன் சிறிதும் தயங்காமல், "இந்தப் பூச்சாண்டியிடமாவது என்னைப் பிடிச்சுக் கொடு... கணக்கு வாத்தியார் இருக்கும் பள்ளிக்கு மட்டும் போகச் சொல்லாதே" என்றான். இதைக் கேட்ட எங்களுக்குச் சிரிப்பு வந்து விட்டது. "அப்படியெல்லாம் பேசக் கூடாது... வாத்தியார்தான் குரு.. இப்ப படிச்சாத்தான் பின்னாடி நல்லாயிருக்கலாம்... பள்ளிக்குப் போ" என்றார் அந்தச் சாமியார். "சரி சாமி, நான் ஒழுங்காகப் பள்ளிக்குப் போகிறேன்" எனச் சொல்லி விட்டுக் கிளம்பினான். சில வார்த்தைகளிலேயே அச்சிறுவனைப் பள்ளிக்குப் போகச் செய்த அந்தச் சாமியாரை ஆச்சரியமாகப் பார்த்தோம், நாங்கள்!

– ராமகிருஷ்ணன்,
காயக்காடு.

மாத்திரை இல்லை

எங்கள் தமிழ் ஆசிரியர் மாத்திரை பற்றிய இலக்கணம் நடத்தினார். அப்போது "ஆங்கில மொழிக்கு மட்டும் மாத்திரை இல்லை" என்றார். என் தோழி ஒருத்தி "ஆங்கிலத்தில் எப்படி மாத்திரை இருக்கும்? டேபிளட் தானே இருக்கும்" என்று கூறவே அனைவரும் சிரித்து மகிழ்ந்தோம்.



– மா. மூகாம்பிகை,
ஏழாம் வகுப்பு,
இராமநாதபுரம் மாவட்டம்.

'வீட்'ல செய்தது!

நானும் என் தோழியும் பள்ளியில் மதிய உணவு அருந்திக் கொண்டு இருந்தோம். அப்போது நான் சப்பாத்தி கொண்டு வந்திருந்தேன். என் தோழி, "சப்பாத்தி வீட்ல செய்ததா? ஹோட்டலில் வாங்கினாயா?" என்று கேட்டாள். உடனே நான் "சப்பாத்தியை 'வீட்'ல (கோதுமை)தான் செய்ய முடியும். ஆனால் இது ஹோட்டலில் வாங்கியது" என்றேன்.

– நா. பாண்டியம்மாள்,
பத்தாம் வகுப்பு,
இராமநாதபுரம்.



எங்கள் பள்ளியில் நடந்தது

குட்டு

என் நண்பன் ஒருவன் 'ஹோம் ஒர்க்' செய்யாமல் பள்ளிக்கு வந்திருந்தான். "ஏன் வீட்டுப் பாடம் செய்யவில்லை?" என்று ஆசிரியர் கேட்டபோது, அவன் குறும்பாக "பாரதியார் சொன்னபடி மாலை முழுவதும் விளையாடி விட்டேன் சார்'' என்றான். எங்கள் ஆசிரியர் ''மாலையில் தானே விளையாடச் சொன்னார். காலையில் படிக்கச் சொல்லியிருக்காரே, அந்த நேரத்தில் நீ வீட்டுப் பாடங்களைப் படித்து இருக்கலாம்'' என்று கூறி தலையில் ஒரு குட்டு வைத்தார்.




– பெ. நடராசன்,
பத்தாம் வகுப்பு, மேலச்சித்தை.

அறிவியல் பெயர்

எங்கள் அறிவியல் ஆசிரியர் தாவரவியல் பெயர்களை நடத்திக் கொண்டிருந்தார். அப்போது செம்பருத்திப் பூவின் அறிவியல் பெயர் 'ரோசா சைனஸ்' என்றார். சற்று நேரம் கழித்து "ரோஜாவின் அறிவியல் பெயர் என்ன?" என்று கேட்க, ஒரு மாணவன் ''செம்பருத்தி சைனஸ்'' என்று சொல்லவே ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்து மகிழ்ந்தோம்.



– அம்பிகா
ஏழாம் வகுப்பு, மேலச்சித்தை.



வடக்கும் தெற்கும்

எங்கள் ஆசிரியர் 'திசைகள்' பற்றிய பாடம் நடத்திக் கொண்டிருந்தார். ஆசிரியரின் பாடத்தைக் கவனிக்காமல் வடக்குப் பக்கமாய் பார்த்துக் கொண்டிருந்த ஒரு மாணவனைப் பார்த்து ஆசிரியர் "வடக்குலே என்னப்பா விசேஷம்?" என்று கேட்டார். திடீர் கேள்வியால் கொஞ்சம் நிலைகுலைந்த பையன் சற்று சுதாரித்துக் கொண்டு "வடக்கிலேயிருந்துதான் தெற்கே சினிமா ஹீரோயின்கள் இறக்குமதியாறாங்க'' என்றான். "இதையாவது ஒழுங்கா நினைவில் வச்சிருக்கியே! சபாஷ்!" என்று விரக்தியுடன் பாராட்டினார் ஆசிரியர்.

– எஸ். பிரசாந்த்,
நெல்லையப்பபுரம்,
நெல்லை மாவட்டம்.

நீண்ட தூரம் தாவும்



தோட்டத்தில் தத்தி, தத்திச் செல்லும் வெட்டுக்கிளியைப் பார்த்திருப்பீர்கள். புற்களில் தத்திச் செல்வதால் இதை ஆங்கிலத்தில் grasshopper என்று அழைக்கிறார்கள். இளம் தளிர்களை வெட்டித் துருவி தின்பதாலும், பச்சை நிறத்தில் இருப்பதாலும் வெட்டுக் கிளி என்று அழைக்கிறோம். சிலர் இதைத் தட்டுக்கிளி, தத்துக்கிளி என்றும் சொல்வது உண்டு.

பூச்சி இனங்களில் கணுக்காலிகள் பிரிவைச் சேர்ந்தது வெட்டுக்கிளி. இவற்றிற்கு கணுக்களாகப் பிரிந்த மூன்று ஜோடி கால்கள் உண்டு. பின் ஜோடி கால்கள் வலுவானவை. இந்தக் கால்களால் வெட்டுக்கிளி தரையிலிருந்து எம்பி வெகுதூரம் தாவிக் குதிக்கிறது. செடிகளைப் பற்றிக் கொள்ள முன்னங்கால்கள் பயன்படுகின்றன.


உயிரினங்களில் அதிக தூரம் தாண்டக் கூடியவை வெட்டுக்கிளிகள்தான்! இது தன் உடலின் நீளத்தைப் போல் 500 மடங்கு தூரம் தாண்டக்கூடியது.

இரண்டு பெரிய கூட்டுக் கண்கள் வெட்டுக்கிளிக்கு உண்டு. இவற்றால் இது அதிகப் பரப்பளவைப் பார்க்க முடியும். வெட்டுக்கிளிக்குப் பல நிறங்களின் வேறுபாடுகளும் நன்கு தெரியும்.

வெட்டுக்கிளியின் காதுகள் அதன் அடிவயிற்றுக்குக் கீழேதான் இருக்கின்றன. சிறிய சத்தத்தைக்கூட வெட்டுக்கிளியால் துல்லியமாகக் கேட்க முடியும்.

சாப்பாட்டு விஷயத்தில் வெட்டுக்கிளி சரியான சாப்பாட்டு ராமன். எல்லாவித தாவரங்களையும் தின்றுவிடக் கூடியது. இதன் உமிழ் நீர் இரையை விழுங்குவதற்கு மட்டுமின்றி, ஜீரணம் ஆவதற்கும் உதவியாக இருக்கிறது.


வெட்டுக்கிளிகளில் பொதுவாக இரண்டு வகைகள் உள்ளன. பச்சை நிறமும் நீள் உணர் கொம்பும் உடைய கிராஸ் ஹாப்பர். பழுப்பு நிறமும் குட்டையான உணர் கொம்புகளும் உடைய லோகஸ்ட். இவற்றில் உருவம், நிறத்தில் வேறுபாடு உண்டு.



கோடை காலத்தில் பெண் வெட்டுக்கிளி தன் பின் வயிற்றின் நுனியால் தரையைக் குடைந்து, அதில் முட்டையிடும். அடுத்த ஆண்டு மே, ஜூன், மாதங்களில் முட்டைகளிலிருந்து லார்வா புழுக்களாக வெளி வருகின்றன. இறக்கை இல்லாத இவற்றால்









பறக்க முடியாது. கூட்டுப்புழு நிலையை அடையாமலே இவை 5 முறை தோலுரித்து, இறக்கை முளைத்து, முதிர்ந்த பூச்சிகளாக மாறுகின்றன.

வெட்டுக்கிளியின் ரத்தம் வெள்ளை நிறமாக இருக்கும். வெட்டுக்கிளி தன் முன்னங்கால்களையும் தலையையும் தரையில் ஊன்றி, பின் பகுதியை மேலே தூக்கி, புற்களோடு புற்களாக நின்று தப்பி விடும்.


வெட்டுக்கிளியின் எதிரிகள் பறவைகள், மூஞ்சுறுகள், சுண்டெலிகள், வண்டுகள்.

லட்சக்கணக்கில் வெட்டுக்கிளிகள் கூட்டமாகச் சேர்ந்துவிட்டால் பயிர்களுக்குப் பயங்கரமான நாசத்தை உண்டு பண்ணிவிடுகின்றன. வெட்டுக் கிளிகளின் கூட்டத்துக்கு ஸ்வாம் என்று பெயர். ஒரே நாளில் 2 லட்சம் டன் உணவுப் பயிர்களை அழித்துவிடக் கூடிய சக்தி வெட்டுக்கிளி கூட்டத்துக்கு உண்டு.

வெட்டுக்கிளிகள் வேகமாகப் பறக்கக் கூடியவை. கூட்டமாகச் செல்லும் போது சூரிய வெளிச்சத்தையே மேக மூட்டம் போல் மறைத்து விடுகின்றன.

பச்சை நிற வெட்டுக்கிளிகள் பாலைவனத்தைக் கடக்கும்போது அவற்றின் நிறம் பழுப்பாக மாறிவிடுகின்றது.

ஜூலை மாதத்தில் ராஜஸ்தானிலும், குஜராத்திலும் வெட்டுக் கிளிகளின் தாக்கம் அதிகம். உலகில் 65 நாடுகள் வெட்டுக்கிளிகளின் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.



■ எஸ்.சுஜாதா ■









• ஜெயசூர்யா • கங்குலி



• சேவக்

செப்டெம்பர் மாதம் இலங்கையில் சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றன. சென்ற முறை சாம்பியனான நியூஸிலாந்து, பாகிஸ்தான், தென்ஆப்பிரிக்கா, உலக சாம்பியனாகிய ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய அணிகள் கால் இறுதி, அரை இறுதி ஆட்டங்களில் தோற்றுப் போயின. இறுதி ஆட்டத்திற்கு இந்தியாவும் இலங்கையும் தகுதி பெற்றன.

அதிரடி சேவக்!

இரண்டு நாட்கள் பெய்த மழையின் காரணமாக, இரண்டு அணிகளும் வெற்றியைப் பகிர்ந்து கொண்டன.

சமீப காலமாக கிரிக்கெட் உலகில் அடிபட்டுக் கொண்டிருக்கும் பெயர் வீரேந்திர சேவக். நடந்து முடிந்த சாம்பியன் டிராபி போட்டியில் சேவக்கின் புகழ் எல்லோருக்கும் தெரிய வந்துள்ளது. இந்திய அணியை இறுதிச் சுற்றுக்கு அழைத்துச் சென்ற பெருமை சேவக்கையே சேரும்.

டில்லியைச் சேர்ந்த சேவக் 1998 ஆம் ஆண்டு ரஞ்சி போட்டிகளில் அதிக ரன்களைக் குவித்தார். இதையடுத்து 1998-99 ஆம் ஆண்டில் மொகாலியில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் விளையாட இவருக்கு வாய்ப்பு கிடைத்தது. இப்போட்டியில் இவர் பிரகாசிக்காவிட்டாலும் 2000-01ல் நடந்த ஆஸ்திரேலியாவிற்கு எதிரான தொடரில் சுழற்பந்து வீசி, பேட்டிங்கில் முத்திரை பதித்தார். இவரது ஆட்டத் திறன் சச்சின் டெண்டுல்கர் போன்று இருப்பதாக கிரிக்கெட் விமர்சகர்கள் வர்ணிக்கிறார்கள். 23 வயதான சேவக் 40 போட்டிகளில் பங்கேற்றுள்ளார். மொத்த ரன்கள் 1155. இதில் 6 அரை சதமும், 2 சதமும் அடங்கும். அதிக பட்ச ஸ்கோர் 126.

40ஆம் பக்கத்தில் வீரேந்திர சேவக்கின் போஸ்டர்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகள்

தென் கொரியாவில் உள்ள புசானில் 14வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் செப்டெம்பர் 29ந் தேதி துவங்கின. இப்போட்டிகளில் இந்தியா உள்பட 44 நாடுகளைச் சேர்ந்த 6,700 வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். ஆசிய நாடுகளிடையே ஒற்றுமை, அமைதி என்பதை வலியுறுத்தி இப்போட்டி நடைபெறுகிறது.


இந்தப் படத்தில் உள்ள 10
தவறுகளைக் கண்டுபிடியுங்கள்!
LOS ANGELES
← 420 mi

மாயக்கண்ணனுக்கும் மனத்துயர்!

வேண்டும் போதெல்லாம் பொன்னை அள்ளித் தரும் சியமந்தக மணியினால் சத்திராஜித்துக்கு மேலும் துன்பமே ஏற்பட்டது என்று சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தேன், நினைவிருக்கிறதா? சத்திராஜித்துக்கு மட்டுமல்ல, மாயக் கண்ணனுக்கே கூட மனத்துயர் ஏற்பட்டது!

சத்திராஜித்திடம் சியமந்தகமணி இருப்பதைப் பொறுக்க மாட்டாமல் அக்ரூரர், கிருதவர்மன் ஆகியோர் சூழ்ச்சி செய்தார்கள். சததன்வன் என்பவனிடம் சென்று, "சியமந்தக மணி சத்திராஜித்திடம் இருப்பதால் அவன் நம்மையெல்லாம் அலட்சியம் செய்கிறான்; அவன் கொட்டத்தை அடக்க வேண்டும். சியமந்தகமணி பலசாலியான உன்னிடம் இருப்பதே சரி" என்று தூபம் போட்டார்கள்.



இதைக் கேட்ட சததன்வன் மனம் கெட்டது. அவன் நள்ளிரவில் சத்திராஜித்தின் மாளிகையில் புகுந்து அவனைக் கொன்று, சியமந்தகமணியை அபகரித்துக் கொண்டான். தன் தகப்பனார் கொல்லப்பட்டது அறிந்து சத்தியபாமா துடித்துப் போனாள்.

அந்தச் சமயம் கண்ணன் ஹஸ்தினாபுரம் சென்றிருந்தான். சத்தியபாமா ரதத்திலேறி அங்கு போய் கண்ணனிடம் நடந்ததைக் கூறி அழுதாள். கண்ணன் அவளுக்கு ஆறுதல் சொன்னான். மாமனாருக்கு இறுதிச்சடங்குகளைச் செய்தான். சததன்வனைத் தண்டிக்கவும் தீர்மானித்தான்.

இதைக் கேள்விப்பட்ட சததன்வன் பயந்து போய், தன்னைத் தூண்டிவிட்ட அக்ரூரரையும் கிருதவர்மனையும் சந்தித்து சியமந்தகமணியை அக்ரூரரிடமே தந்துவிட்டு குதிரை ஏறி தப்பி, விதர்ப்ப தேசத்துக்கு ஓடிப் போனான். கண்ணன் அவனைப் பின் தொடர்ந்து சென்று அழித்தான். ஆனால் அவனிடம் சியமந்தகமணி இல்லாதது கண்டு ஆச்சரியப்பட்டான். பலராமனிடமும் கூறினான். ஆனால் பலராமனோ கண்ணனே சியமந்தகமணியை எடுத்து வைத்துக்கொண்டு தன்னை ஏமாற்றுவதாக நினைத்தான்! துவாரகைக்குத் திரும்பாமல் விதர்ப்ப தேசத்திலேயே தங்கிவிட்டான்.

இதற்கிடையில் அக்ரூரர் சியமந்தகமணி தன்னிடம் இருப்பதால் தனக்கு ஆபத்து வரும் என்று பயந்து, கண்ணனிடம் வந்து, தான் காசி யாத்திரை போவதாகக் கூறி, அவசரமாகப் புறப்பட்டுச் சென்று விட்டான். துவாரகைக்குத் திரும்பும் உத்தேசமே அவனுக்கு இல்லை. பலராமன் விதர்ப்ப நாட்டிலேயே தங்கி, திரும்பி வராமல் இருப்பதைக் கண்ட துவாரகை மக்கள், கண்ணன்தான் இதற்கெல்லாம் காரணம் என்று அவதூறு பேச ஆரம்பித்தார்கள்!

கண்ணன் மனம் நொந்து போனான். நடந்ததை ஊகித்து, அக்ரூரரைக் காசியிலிருந்து அழைத்து வரச் செய்து, உண்மையை ஒப்புக் கொள்ள வைத்தான். அக்ரூரர் கண்ணன் காலில் விழுந்து மன்னிப்பு கோரினான். பலராமன் மனம் தெளிந்து துவாரகை திரும்ப, மக்களும் மகிழ்ந்தனர்.

அக்ரூரர் சியமந்தகமணியைக் கண்ணனிடம் சமர்ப்பிக்க, "இதனால் யாரும் மன நிம்மதி பெற்றதில்லை. இதற்கு ஆசைப்பட்டீர்கள்; நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்றான் கண்ணன். இவ்வாறு சியமந்தக மணியினால் துன்பமே விளைந்தது.

செல்வம் தேவைதான். ஆனால் அளவுக்கு மீறிய செல்வமும் உழைப்பே இன்றி பெறப்படும் செல்வமும் துயரத்தையே தரும். லாட்டரி சீட்டு விற்கும் நிலையங்கள் கண்ணில் படும்போதெல்லாம் சியமந்தகமணி கதையை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்!

- ஆசிரியர்

புதிர் உலகம்



கார் தாமதமானதுக்கு என்ன காரணம்?

1. ஒரு முட்டை வியாபாரி, தன்னிடம் இருந்த முட்டைகளில் பாதியையும், ஓர் அரை முட்டையையும் முதல் வாடிக்கையாளருக்குக் கொடுத்தார். இரண்டாவது வாடிக்கையாளருக்கு, மீதியிருந்த முட்டைகளில் பாதியையும், ஓர் அரை முட்டையையும் கொடுத்தார். இதேபோல மீதியிருந்த முட்டைகளில் பாதியையும், ஓர் அரை முட்டையையும் மூன்றாவது வாடிக்கையாளருக்குக் கொடுத்தார். ஒரு முட்டையைக் கூட அவர் உடைக்கவில்லை.மூன்று வாடிக்கையாளர்களுக்கும் தந்த பின், அவரிடம் 3 முட்டைகள் மீதியிருந்தன. அவரிடம் ஆரம்பத்தில் இருந்த முட்டைகள் எத்தனை?

- ஆர். பிரசன்னா, கரூர்.

2. கல்பனா கணக்குத் தேர்வு எழுதினாள். மொத்தம் 100 கணக்குகள். ஒவ்வொரு கணக்குக்கும் ஒரு மதிப்பெண். எல்லாக் கணக்குகளுக்கும் அவள் விடை எழுதினாள். இருந்தாலும் சில விடைகள் தவறாகப் போய்விட்டன. சரியான விடைக்கு ஒரு மதிப்பெண் தரப்பட்டாலும், தவறான விடை ஒவ்வொன்றுக்கும் 2 மதிப்பெண்கள் கழிக்கப்பட்டன. மொத்தத்தில் அவள் 79 மதிப்பெண்கள் வாங்கினாள். அப்படியானால் அவள் எத்தனை கணக்குகளுக்குச் சரியான விடை எழுதினாள்?

- ஆர்.ராஜலட்சுமி, கரூர்

3. சென்னையிலிருந்து புதுவைக்கு ஒரு கார் இரண்டரை மணி நேரத்தில் வந்து சேர்ந்தது. ஆனால் அதே கார் புதுவையிலிருந்து சென்னைக்குச் செல்ல நூற்றைம்பது நிமிடங்கள் ஆயிற்று. காரின் வேகமும், குறையவில்லை. வழியில் தடங்கல் ஏதும் ஏற்படவில்லை. அவ்வளவு நேரமானதற்கு என்ன விளக்கம் தர முடியும்?

- ஏ.கே.எஸ்.குமார், விருதுநகர்

4. ஒரு டென்னிஸ் பந்தை உங்கள் பலம் கொண்ட மட்டும் வீசலாம். ஆனால் அது எதன் மீதும் படாமல் உங்களிடமே திரும்பி வர வேண்டும். எப்படி?

- என். ஜரினா பானு, திருபட்டினம்

5. கிராமத்தில் ஒரு பெரிய கூட்டுக் குடும்பம். மூன்று அண்ணன் தம்பிகள் இருந்தனர். அவர்களுக்குச் சொந்தமான தோட்டத்தில் இருந்த மாமரத்தில் பெரிய அண்ணன் மாம்பழங்களைப் பறித்துக் குவித்து மூன்று சம பங்காக்கினார் எண்ணிக்கையில். ஒன்று மிச்சம் இருக்கவே, அதைத் தன் மகனிடம் கொடுத்துவிட்டு ஒரு பங்கை எடுத்துக்கொண்டு மீதம் இரண்டு பங்கைக் குவித்து வைத்துவிட்டுச் சென்றார். அடுத்தவர் வந்து அதை மீண்டும் மூன்று சம எண்ணிக்கை பங்காக்கிட ஒன்று மிச்சம் வரவே அதைத் தன் மகனிடம் கொடுத்துவிட்டு ஒரு பங்கை எடுத்துக் கொண்டு, இரண்டு பங்கு பழங்களைக் குவித்து வைத்துவிட்டுச் சென்றார். மூன்றாமவரும் முந்தையவர்கள் போன்றே மூன்று பங்காக்கிட ஒன்று மீதம் வரவும் அவரும் தன் மகனுக்கு ஒன்றைத் தந்துவிட்டு ஒரு பங்கை எடுத்துக் கொண்டு, இரண்டு பங்கினைக் குவித்து வைத்தார். அவர்களின் மனைவியர்கள் மூவரும் வந்து அப்பழங்களைச் சம பங்காக்கி எடுத்துச் சென்றனர். மொத்தம் எத்தனை பழங்கள்? அவர்கள் எப்படி பிரித்து எடுத்துக் கொண்டனர்?

- டி. புவனேஸ்வரி, ஒன்பதாம் வகுப்பு, திருக்கருகாவூர் மேல்நிலைப் பள்ளி, திருக்கருகாவூர்.

6. 200 என்ற எண்ணை இரண்டு பாகங்களாகப் பிரித்து, முதல் பாகத்தை 2ஆல் வகுத்து வரும் விடையை, இரண்டாம் பாகத்தை 2ஆல் வகுத்து வரும் விடையை கழித்தால் விடை 24 வர வேண்டும். அப்படியானால் 200ஐ நீங்கள் எந்த இரண்டு பாகங்களாகப் பிரிப்பீர்கள்?

- சிவ. மணவழகி, மயிலாடுதுறை.

விடை : 21ஆம் பக்கம்

வினதையின் விடுதலை

கத்ரு, வினதை இருவரும் கசயப முனிவரின் மனைவியர். கத்ருவுக்கு நாகங்கள் பிள்ளைகளாகப் பிறந்தன. வினதை கத்ருவை விட அழகானவள். அதனால் கத்ரு அவள் மீது பொறாமை கொண்டாள். அவளை மட்டம் தட்ட சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் காத்திருந்தாள்.

ஒருநாள் இருவரும் அருவியில் நீராடப் புறப்பட்டனர். நீராடும்போது பள்ளத் தாக்கில் தேவலோகக் குதிரையான உச்சை சிரவஸ் புல் மேய்ந்து கொண்டிருந்





ததைப் பார்த்தனர்.

"இதுதான் எத்தனை வெண்மை!" என்று வாய்விட்டு அதிசயித்தாள் வினதை. அவளை மடக்க வேண்டுமென்பதற்காக "இல்லை. வாலின் நுனி மட்டும் சிறிது கறுப்பு" என்றாள் கத்ரு.

"எங்கே கறுப்பு? உன் கண்ணில் கோளாறு" என்று வாதிட்டாள் வினதை.

"ஏன் வீண் தர்க்கம்? நாளை காலை அருகில் சென்று பார்ப்போம். வாலில் நுனி கறுப்பானால் நீ எனக்கு அடிமையாக வேண்டும். சம்மதமா?" என்று கேட்டாள்

ஆர். பொன்னம்மாள்



கத்ரு.

ஒப்புக் கொண்டாள் இளையவள்.

வீட்டுக்கு வந்ததும் தன் பிள்ளைகளான நாகங்களைக் கூப்பிட்டு, தனக்கும் வினதைக்கும் நடந்த சர்ச்சையைக் கூறி, "என் வார்த்தை பொய்யாகக் கூடாது. வினதை எனக்கு வேலைக்காரியாக வேண்டும். நீங்கள் யாராவது போய் குதிரையைத் தொந்தரவு செய்யாமல் சிறிது நேரம் அதன் வால் நுனியைச் சுற்றிக் கொள்ள வேண்டும். யார் போகப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"அம்மா! உண்மையைப் பொய்யாக்குமாறு தாங்களே கேட்கலாமா? மோசடிக்குத் துணை போனால் துன்பம் வரும்" என்று ஒவ்வொன்றாய் மறுத்தன.

இதனால் கோபம் கொண்ட கத்ரு அவற்றை "நெருப்பில் விழுந்து சாம்பலாகக்கடவது" என்று சபித்தாள். சாபத்துக்குப் பயந்த ஒரு குட்டிப் பாம்பு தாயின் ஏற்பாட்டுக்கு ஒத்துக்கொண்டது.

நன்றாக விடியாத நேரம். கத்ரு, வினதையிடம் காட்டினாள். "அதோ பார் குதிரையின் வாலை!" என்று.

வினதைக்கு எதுவுமே புரியவில்லை, எப்படி இப்படி கறுப்பு வந்ததென்று. அருகில் போய் தொட்டுப் பார்க்கலாமென்று புறப்பட்டாள்.

"வினதை! நீ நிறைமாத கர்ப்பிணி. பின்னால் போனால் குதிரை உதைக்கும். போகாதே! இங்கிருந்தே தெரியவில்லையா?" என்றாள் கத்ரு. குதிரை நின்ற இடம் சரிவாயிருந்ததால் வினதைக்குப் பயமாகவும் இருந்தது. தலைவிதியை நொந்து கொண்டு இல்லம் திரும்பினாள்.

வினதை கத்ருவுக்கு அடிமையாகி அவள் ஏவிய வேலைகளைச் செய்தாள். வினதைக்கு முதலில் பிறந்த பிள்ளை அருணன். அவன் முடமானபடியால் சூரியனின் ரத சாரதியானான். இரண்டாவது பிள்ளை கருடன். அவன் வளர்ந்தவுடன் தன் தாய் அடிமையாயிருப்பதற்குக் காரணம் கேட்டான்.

வினதையும் நடந்ததைக் கூறி "எனக்கு சூதுவாது தெரியாது. சில நாட்களில் கறுப்பு உதிர்ந்து விடும். மறுபடி வரும் என்கிறாள், உன் பெரியம்மா. நான் எப்படி நிரூபிப்பேன்?" என்று வருந்தினாள்.

கருடன் பெரியம்மாவிடம் சென்றார். "என் தாயின் அடிமைத்தனம் நீங்க என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

"என் மைந்தர்களுக்குச் சாகாவரம் வேண்டும். அதற்காக நீ தேவேந்திரனிடமுள்ள அமிர்தகலசத்தைக் கொண்டு வந்தால் வினதையை விடுவிக்கிறேன்" என்றாள் கத்ரு.

கருடன் அமிர்தகலசத்தை எடுக்க முயன்றபோது தேவேந்திரன் வஜ்ராயுதத்தை எறிந்தான். வஜ்ராயுதத்துக்கு ஒரு இறக்கையை அர்ப்பணித்து அமிர்தகலசத்தை எடுத்தார் கருடன்.

பின்னர் நடந்ததை இந்திரனிடம் கூறி கொஞ்சமாக அமிர்தத்தைச் செலவழித்து பத்திரமாகத் திருப்பி வைப்பதாகக் கூறி விடை பெற்றார் கருடன்.

நள்ளிரவில் தர்ப்பையைப் பரப்பி அது தெரியாமல் அதன் மேல் மெல்லியதாக பசும் புல்லைப் போட்டு வைத்தார். விடியற்காலை கத்ருவிடம் சென்று, "பெரியம்மா, அமிர்தம் கொண்டு வந்திருக்கிறேன். கலசத்தை உன்னிடம் தர உத்தரவில்லை. அமிர்தத்தை இப்

"ஏண்டா உன்னை அறிவியல் டீச்சர் அடிச்சாங்க?"

"ஒரு செல் உயிரினத்துக்கும் பல செல் உயிரினத்துக்கும் உள்ள வேறுபாடு என்னன்னு கேட்டாங்க. நான் 'அது ஒரு செல்; இது பல செல். அதான் வேறுபாடு'ன்னு சொன்னேன்..."

— தேனி பிரபு



புல்லில் ஊற்றுகிறேன். உன் புதல்வர்களை வந்து குடிக்கச் சொல்'' என்றார்.

கத்ரு மகிழ்ச்சியுடன் பிள்ளைகளை அழைத்தாள். அவை திரண்டு வந்தன. ஆகாயத்திலிருந்து அமிர்தத்தை விட்டார் கருடன். பாம்புகள் ஆவலாய் நக்கின. தர்ப்பை நாக்கைக் கிழிக்க நாக்குகள் இரண்டாய் பிளவுபட்டன. ஒரே ரத்தம். நாகங்கள் மயங்கின. ஆனால் அமுதம் உண்டதால் இறக்கவில்லை!

''கருடா! இது வஞ்சகம்'' என்று கூச்சலிட்டாள் கத்ரு.

''நீங்கள் செய்தது மோசடி இல்லையா? என் தாய் அப்பாவி. நீங்கள் சதி செய்ய பிள்ளையைத் துணை கொண்டீர்கள்! நான் என் தாயின் விடுதலைக்காக இப்படி செய்தேன்! முள்ளை முள்ளால்தானே எடுக்க முடியும்? என் தாய் விடுவிக்கப்படாவிடில் உன் பிள்ளைகளை விழுங்கிவிடுவேன்'' என்றார் கருடன்.

''வேண்டாம். என் பிள்ளைகளை விட்டு விடு. வினதை இன்றுமுதல் என் அடிமை அல்ல. சகோதரி'' என்றழுதாள் கத்ரு.

அமிர்த கலசத்தை இந்திரனிடம் சேர்ப்பித்தார் கருடன். வினதை மகனால் சுதந்திரம் பெற்றாள். பாம்புகளுக்கு நாக்குப் பிளவு பட்டிருப்பது அவர்களின் தாய் செய்த சூழ்ச்சியால்.

கத்ரு தன் மூத்த மகனிடம் கருடனுக்குச் சமமான அந்தஸ்தைப் பெற தவம் செய்யச் சொன்னாள். ஆதிசேஷனும் கடும் தவம் செய்து திருமாலின் படுக்கையாகும் பாக்கியத்தைப் பெற்றார். கருடன் மகாவிஷ்ணுவின் வாகனமானார்.

பரீட்சித்து மகாராஜா பாம்பினால் இறந்ததால் அவரது மகன் ஜனமேஜயன் சர்ப்பங்களை அழிக்க சர்ப்ப யாகம் செய்தார். கத்ருவின் சாபம் பெற்ற நாகங்கள் அதில் விழுந்து சாம்பலாயின. பரீட்சித்துவைக் கடித்த தக்ஷகன் தவம் செய்து பரமசிவன் கழுத்தில் பாம்பு ஆபரணமானார்.

புதிர் உலகம் விடைகள்




1. 31 முட்டைகள்
2. 93 கணக்குகள்
3. ஒரே நேரம்தான் ஆகியுள்ளது. 150 நிமிடங்கள் என்பதும் இரண்டரை மணி நேரம் என்பதும் ஒன்று தானே!
4. சுலபம். பந்தை நேராக ஆகாயத்தில் வீசுங்கள்
5. மொத்தப் பழங்கள் 25

அதை மூன்றாகப் பிரிக்க 8 x 3=24	
பையனுக்கு மீதம்	= 1
முதலாமவர் எடுத்துச் சென்றது	= 8.
இரண்டாவதாக வந்தவர் 16 பழங்களை	
மூன்றாகப் பிரிக்க 5 x 3 =	15
பையனுக்கு மீதம்	= 1
இரண்டாமவர் எடுத்துச் சென்றது	= 5.
மூன்றாவதாக வந்தவர் 10 பழங்களை	
மூன்றாகப் பிரிக்க 3 x 3 =	9
பையனுக்கு மீதம்	= 1
மூன்றாமர் எடுத்துச் சென்றது	= 3.
கடைசியாக வந்தவர்கள் 6 பழங்களை	
மூன்றாகப் பிரிக்க 3 x 2	= 6

6.

முதல் பாகம்	124	124 / 2 =	62
இரண்டாம் பாகம்	76	76 / 2 =	38
	200		24

வெற்றியின் ரகசியம் என்ன?



• நேரு

காண முடியுமா?

ஃபிரெஞ்சு நாவலாசிரியர், பால்சாக் வசித்த அறைக்குள் ஓரிரவு திருடன் நுழைந்து மேஜையைத் துழாவிக் கொண்டிருந்தான். தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்த பால்சாக் இதைக் கவனித்து விட்டு உரக்கச் சிரித்தார். "ஏன் சிரிக்கிறாய்?" என்று மிரட்டினான் திருடன். "நான் பகலில் காண முடியாத பணத்தை இரவில் கண்டு விடலாமென்று இவ்வளவு சிரமப்படுகிறாயே! அதை நினைத்தேன், சிரிப்பு வந்தது" என்றார் பால்சாக்!

— அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.

போராட்டம்

புகழ்பெற்ற தத்துவஞானியான சாக்ரடீஸ் நிறைய இளைஞர்களிடையே கேள்விகளால் நற்சிந்தனைகள் வளர்த்து வந்தார். ஒருநாள் அவரிடம் இளைஞன் ஒருவன், "வெற்றியின் ரகசியம் என்ன?" என்று கேட்டான். உடனே சாக்ரடீஸ் அருகிலிருந்த தண்ணீர் தொட்டிக்குள் அவன் தலையை அழுத்தினார். அவன் மூச்சுக்காகப் போராடும் நேரத்தில் விடுவித்தார். இப்போது "எதற்காகப் போராடினாய்...?" என்று கேட்டார். "மூச்சுக்காக" என்றான். அவர், "காற்றுக்காக எப்படி போராட்டம் செய்தாயோ, அதுபோலத்தான் வெற்றிக்கான ரகசியமும்; அது போராட்டத்தில்தான் உள்ளது" என்று விளக்கினார்.

— ப. காளிதாசன், நீர்விளங்குளம்.

பதிலடி!

ஒரு சமயம் மத்திய அசெம்ளியில் ஓர் ஆங்கிலேயர், "சூரியன் ஒருபோதும் அஸ்தமிக்காத உலகளாவிய சாம்ராஜ்யத்தை நாங்கள் பெற்றுள்ளோம்" என்று பெருமையடித்துக் கொண்டார். உடனே சத்தியமூர்த்தி, "ஆமாம் பிரிட்டிஷ்காரனை இருட்டிலே விட்டு வைக்க கடவுளுக்குக் கூட அவநம்பிக்கை" என்று கடச்கடப் பதிலடி கொடுத்தார். அந்த ஆங்கிலேயர் அவமானத்தால் தலை குனிந்தார்.

ஞாபக மறதி

புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் செஸ்டர்டன். அவர் மிகுந்த ஞாபக மறதி உடையவர். தினமும் காலையில் தமது பத்திரிகை அலுவலகத்திற்குச் செல்வது வழக்கம். ஒரு நாள் வழக்கம்போல பத்திரிகை அலுவலகத்திற்குப் புறப்பட்

• கி.வா.ஜ.





• சத்தியமூர்த்தி

டார். ஆனால் அவருக்குத் திடீரென ஞாபக மறதி வந்துவிட்டது. தமது அலுவலகம் எங்கே இருக்கிறது என்பதை அவர் சுத்தமாக மறந்து விட்டார்! எவ்வளவோ முயற்சி செய்தும் அவருக்குக் கொஞ்சம் கூட ஞாபகமே வரவில்லை.

உடனே பத்திரிகை விற்கும் கடைக்குச் சென்று தமது பத்திரிகை ஒன்றை விலைக்கு வாங்கி அதைப் புரட்டிப் பார்த்த பிறகே தமது அலுவலகம் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டார்!

— ஔவை ஏ.எஸ். யோகானந்தம்

ஏலம்...

சார்லி சாப்ளின் ஒரு ஏலக்கடைக்குப் போனார். அங்கே இருந்த கிளி ஒன்றை வாங்க விரும்பி ஏலம் கேட்டார். கடைக்காரரும் 'சரி, ஏலம் கேளுங்கள்' என்று சாப்ளினிடம் கூறினார்.

சார்லி, 10 டாலர், 20 டாலர், 30 டாலர் என்று கூறி கடைசியாக 100 டாலருக்கு அந்தக் கிளியை வாங்கினார்.

கடைசியாக சாப்ளினுக்கு ஒரு சந்தேகம். கடைக்காரரிடமே கேட்டார்:

"ஆமாம், கிளி பேசுமா?"

"இவ்வளவு நேரம் நீங்க கேட்ட ஏலத் தொகைக்குப் போட்டி குரல் கொடுத்ததே இந்தக் கிளிதானே" என்றார் கடைக்காரர்!

மழை

1940ம் ஆண்டு மும்பை ஆசாத் மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் மௌலானா ஆசாத், நேரு மற்றும் பல தலைவர்கள் கலந்து கொண்டனர். நேரு பேசத் தொடங்கியபோது மழை பொழியத் தொடங்கியது. பெரும் மழையிலும் இலட்சக்கணக்கான மக்கள் ஆர்வத்துடன் அவரது சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அப்போது ஒருவர் நேருவின் தலைக்கு மேலே குடை பிடித்தார். "மக்கள் மழையில் நனையும் போது எனக்குக் குடை எதற்கு?" என்று நேரு ஆத்திரம் கொண்டார்.

உடனே கோபம் தணிந்து பொது மக்களிடம் ஒலிபெருக்கியில் பின்வருமாறு கூறினார்: "குடை எனக்காக அல்ல. என் ஒலிபெருக்கியைப் பாதுகாக்கவே இந்த மனிதர் குடைபிடிக்கிறார்" என்றார். மக்கள் ஆரவாரம் மழை ஓசையைவிட அதிகரித்தது.

— என். ஜரினா பானு

பையனாக...


ஒரு சமயம் விழா ஒன்றுக்குத் தலைமை தாங்க கி.வா.ஜவை அழைத்திருந்தனர். விழா முடிவில் கி.வா.ஜவிடம் மாலைகளையும், சில பழங்களையும் ஒரு பையில் போட்டுக் கொடுத்தனர்.

உடனே கி.வா.ஜ. வேடிக்கையாக, "என்னைப் பெரியவனாகக் கூப்பிட்டு 'பை'யனாக அனுப்புகிறீர்களே" என்று கூறி சிரிப்பலையில் விண்ணைப் பிளக்கச் செய்தார்!

— குட்டிபிரசன்னா



• சார்லி சாப்ளின்



தைக்க முடியாத நூல் – அது என்ன?

I) 1) காயும் நானே, கனியும் நானே,
கல்லடி பட்டால் இரண்டாவேன் - நான் யார்?
2) பார்க்க முடிந்த நூல் நான்,
தைக்க முடியாத நூல் நான் - நான் யார்?
3) என்னை அடித்தாலும் சரி, என்னை உதைத்தாலும் சரி, நான் அழ மாட்டேன் - நான் யார்?
4) ஆயிரம் கதைகள் சொல்வேன்,
ஆயிரம் கவிதைகள் எழுதுவேன்,
வெள்ளைத் தாளிலே நாட்டியமாடி,
வேண்டிய ஞானம் கொட்டுவேன் - நான் யார்?
5) வட்ட வட்ட சிப்பி நான்,
வாலில்லாத சிப்பி நான்,
எலும்பில்லாத சிப்பி நான்,
தூங்குபவனை எழுப்பும் சிப்பி நான் - நான் யார்?

- எம். வினோத், விருத்தாசலம்

II) 1) இரவிலே பிறந்த ராஜகுமாரனுக்குத் தலையிலே குடை.
2) காட்டிலே இருக்கும் குடை வீட்டிலே இருக்காது.
3) கால் படாத நிலத்தில் கரு இல்லாத முட்டை.
4) யாருமில்லா இடத்தில் எங்கம்மா குடைபிடிக்கிறாள்.
5) மழை போன பின்பு மாடசாமி குடை பிடித்தான் - இவை என்ன?

- சௌம்யாயனி, ஒன்பதாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் ம.மே.பள்ளி,
தூத்துக்குடி.

III) 1) அனலில் பிறந்தவன்; ஆகாயத்தில் பறக்கிறான் - அவன் யார்?
2) கையில்லை நீந்துவான்; காலில்லை ஓடுவான் - அவன் யார்?
3) சிவப்புப் பெட்டிக்குள் சில்லரை கொட்டிக்கிடக்கு - அது என்ன?
4) மஞ்சள் பெட்டிக்குள் சிவப்பு முத்துகள் - அது என்ன?
5) நோயுமில்லை; நொடியுமில்லை, நாளெல்லாம் மெலிகிறான் - அவன் யார்?

- ந. வினோதினி, ஒன்பதாம் வகுப்பு,
எம்.பி.என். அரசு ம.மே.நி.பள்ளி,
சென்னை.

IV) 1) இணை பிரியாதவர்கள், நண்பர்கள் அல்ல. ஒன்று சேர மாட்டார்கள், பகை வீரர்கள் அல்ல - அது என்ன?
2) காதில்லை கேட்பதற்கு; கண்ணில்லை பார்ப்பதற்கு; வாயில்லாமல் நீதி சொல்லும் - அது என்ன?
3) காட்டில் தொங்கும் பொட்டலம், காவல் நிறைந்த பொட்டலம் - அது என்ன?
4) காற்றால் உருளும்; காலால் உதைத்தால் நகரும் - எது என்ன?
5) காற்றைக் குடிப்பான்; கைகளில் தவழ்வான் - அவன் யார்?

ஆர். ராஜலட்சுமி, கரூர்.

விடைகள்:
I) 1) தேங்காய், 2) சிலந்தி வலை, 3) பந்து, 4) பேனா, 5) மூட்டைப்பூச்சி
II) ஒரே விடை: காளான்
III) 1) புகை, 2) படகு, 3) மிளகாய், 4) மாதுளம்பழம், 5) காலண்டர்
IV) 1) தண்டவாளம், 2) தராசு, 3) தேன்கூடு, 4) சைக்கிள், 5) பலூன்.

கமகமக்கும் கோகோ!

சாக்லேட்டை விரும்பாத குழந்தைகளே இல்லை எனலாம். அந்த சாக்லேட் எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது தெரியுமா? தியோபுரோமா கோகோ என்னும் 'கோகோ' மரத்தின் கொட்டையிலிருந்துதான். பெரியவர்கள் அனைவரும் விரும்பிப் பருகும் கோகோ பானத்தையும் தருவது கோகோ மரம்தான். எல்லா பானங்களையும் விட அதிக ஊட்டச்சத்து மிகுந்தது கோகோவும், சாக்லேட்டும்தான். கோகோ கோலாவிலும் கூட, கோகோவின் காரச் சத்துள்ள தியோபுரோமின் கலந்துள்ளது. கோகோ மரம் ஸ்மெர்குலிசியே என்ற குடும்பத்தைச் சேர்ந்தது.




கோகோவின் வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால், அது வெப்ப மண்டல அமெரிக்காவில் முதன்முதல் முளை விட்டிருப்பது தெரிய வருகிறது. மிக மிகப் பழமையான நாகரிகம் கொண்ட 'அஸ்டெக்' இன மக்களாலும், அமெரிக்கப் பழங்குடி இன மக்களாலும் விருப்பமான பானமாகப் பருகப்பட்டதாம். அஸ்டெக்குகள் இதனைக் குளிர் பானமாக, நுரையுள்ள திரவமாய், நுரை மேலே மிளகும், நறுமணப் பொருட்களும் தூவி அலங்கரித்து 'சாக்லேட்' எனப் பெயரிட்டுக் குடித்து மகிழ்ந்தனர். கி.பி 1519ல் கோர்ட்ஸ் என்பவர் தென் அமெரிக்காவுக்குச் சென்றபோது இப்பானம் பற்றி அறிந்தார். பின் இது 1526ல் ஸ்பானியர்கள் மூலம் ஐரோப்பாவுக்குள் நுழைந்து, காபியுடன் கோகோவும் பரவலான பானமாகத் திகழ்ந்தது.

இந்திய சரித்திரத்தில் கோகோ பயிரிடுதல் 19ம் நூற்றாண்டுக்கு முன்னரே துவங்கி விட்டது. துவக்க காலத்தில் பிரேசில், ஈக்வெடார் மற்றும் நில நடுக்கோட்டின் அருகிலுள்ள பகுதிகளில் மட்டுமே பயிரிடப்பட்டது. பின் ஆப்பிரிக்கா முழுவதும் பரவியது. இந்தோனேஷியாவிலும், இலங்கையிலும் கூட ஓரளவு கோகோ விளைகிறது. பலவகையான கோகோ மரங்கள் இருந்தாலும் 19ம் நூற்றாண்டில் தோன்றிய இருவகைகளான கிரியோல்லா மற்றும் ஃபோரஸ்டிரோவும்தான் முக்கியமானவை. கிரியோல்லாவின் சிறிய விதைகள் மென்மையான மணமுள்ளவை; ஃபோரஸ்டிராவின் கடின ஓட்டிற்குள் ஆழ்ந்த கருநீல நிற விதைகள் உள்ளன. கோகோ எளிதில் பயிரிடப்படுவதாலும்




எல்லோராலும் விரும்பப்படுவதாலும், ஊட்டச்சத்து மிக்கதாலும் இது முக்கியமான வணிக மதிப்புள்ள பயிராக இருக்கிறது.

கோகோ மரம் எப்போதும் பசுமையாக இருக்கும்; அடர்ந்து படர்ந்த கிளைகளுடன் 15-27 அடி உயரம் வரை வளரும்; கிளைகளில் அடர்த்தியாய் பளபளவென மின்னும் நீள்வட்ட இலைகள் 1 அடி நீளம் உடையவை. கோகோ மரத்தின் அடி மரத்திலும், பெரிய கிளைகளிலும்,



சிறிய காம்புடைய பூக்களும், பழங்களும் தொங்கும். மரத்துக்கு 4-5 வயதானவுடன் காய்க்கத் துவங்கி, சுமாராக 50 ஆண்டுகள் வரை நன்கு காய்க்கும். மரம் வருடம் முழுவதும் பூவும், காயும், கனியுமாய் காய்த்துத் தொங்கும். கோகோ பழம் கடினத் தோல்பட்டையுடன் காணப்படும். பழத்தின் நுனியில் மடிப்புகள் உள்ளன. பழத்தோலின் உட்புற சதைப் பகுதியில் 40-60 எண்ணிக்கையுள்ள அரைவட்ட வடிவ விதைகள் புதைக்கப்பட்டிருக்கும். பச்சை நிறமுள்ள இளம் விதை முதிர 4 மாதங்களாகும். பச்சையிலிருந்து சிவப்பு நிறமாகி, பின் பழுப்பு அல்லது மஞ்சள் நிறமானதும் முதிர்ந்து விடும்.

கோகோ பயிரிடுதல் முக்கியத் தொழிலாகும். இத் தொழிலின் முக்கியத்துவமே கோகோ விதைகளை அனைவரும் பரவலாக விரும்பும் சாக்லேட்டாகத் தயாரிப்பதுதான். பழங்கள் பத்திரமாய் பறிக்கப்பட்டு, பக்குவமாய் விதைகள் நீக்கப்பட்டு, வியர்வைப் பெட்டி (Sweating box) எனப்படும் பெரிய பாத்திரத்திற்குள் வைக்கப்படும்; அதனுள் குவிக்கப்பட்ட கோகோ விதைகள் பல நாட்களுக்கு (குறைந்த பட்சம் ஒரு வாரம்) இருக்கும். சதைப்பகுதி நன்றாக ஊறியதும், அதிலுள்ள கொட்டைகள் பழுப்பு கலந்த சிவப்பு நிறமடைந்து, அதன் சாயத்தன்மை குறைந்து, பின் அதன் இயல்பு, வாசனையான சமகம கோகோ மணம் வந்துவிடும். பிறகு அவை சுத்தமாகக் கழுவப்பட்டு, உலர வைத்து கோகோ விதைகளைப் பெரிய இரும்பு பாத்திரங்களில் போட்டு வறுத்தெடுப்பர். அப்போது அதன் மென்மையான வாசனை மூக்கைத் துளைக்கும். வறுத்தலால் விதையிலைகளில் ஏற்படும் வேதி மாற்றமே மணத்தை உண்டு பண்ணுகிறது.



கோகோ விதைகளை வறுப்பதன் மூலம் கொழுப்பு 50 சதமும், புரதமும் அதிகரிக்கிறது; அதிலுள்ள கசப்புச் சுவை குறைகிறது. கொட்டை நீக்கப்பட்ட, உடைக்கப்பட்ட விதைகள் நன்றாக எண்ணெய் பசையுடன் இருக்கும்; இவை தூளாக அரைக்கப்பட்டவுடன், கோகோவிற்கே உரித்தான லேசான கசப்புடன் கூடிய சாக்லேட் கிடைக்கும்; திரவ வடிவில் இருக்கும்; நன்றாகக் குளிர்ந்த பின் இறுகி விடும். இதுவே பானங்கள், இனிப்புகள், கேக்குகள் மற்றும் பிற தயாரிப்புகள் செய்வதற்கான அடிப்படை பொருளாகும். இத்துடன் பால், இனிப்பு மற்றும் இன்சுவை வாசனைப் பொருட்கள் சேர்த்து 'மில்க் சாக்லேட்' தயாரிக்கப்படுகிறது;

சாக்லேட் சிறந்த சத்துள்ள பானம். கோகோவிலிருந்து வெளியாகும் வெள்ளை அல்லது மஞ்சள் நிற கொழுப்பு அதன் விதையிலிருந்து வருவதாகும். இதுவே 'கோகோ வெண்ணெய்' என விற்கப்படுகிறது. இதுவே சாக்லேட் செய்யப் பயன்படுகிறது.

இந்தியாவில் கேரள விவசாயப் பல்கலைக் கழகம்தான், கோகோ பயிரிடுவதற்கான நுட்பமான யுக்திகளைக் கண்டறிந்து, பக்குவமாகத் தேங்காய் மற்றும் பாக்கு மரங்களிடையே ஊடு பயிராகப் பயிரிட்டு வருகிறது; நீலகிரியிலும் கோகோ தோட்டம் உள்ளது.

- எஸ். மோகனா

1000/- ரூபாய் பரிசுப் போட்டி!



பள்ளி மாணவ, மாணவியரான உங்களுக்காக இந்தப் போட்டி ஒவ்வொரு மாதமும் நடத்தப்படுகிறது. நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்களை ஏற்றுக் கொள்ள இயலாது. மொத்த பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். உங்கள் படிப்புக்குத் தேவையான பொருட்களை இதில் நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். உங்கள் பள்ளி, வீட்டு முகவரிகளை மறவாமல் குறிப்பிடவும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி 20.11.2002

இந்த மாதப் போட்டி

பொருத்துக:

1. வாதாபிகொண்டான்	கியூபா
2 ஃபிடல் காஸ்ட்ரோ	சண்டிகர்
3. பஞ்சாப்/ஹரியானா	கோபாலகிருஷ்ண கோகலே
4. முகமது அலி	பாலூட்டி
5. காந்தியின் அரசியல் குரு	குத்துச்சண்டை வீரர்
6. திமிங்கிலம்	நரசிம்ம பல்லவர்

7. கொடி உடம்புக்காரிக்குக் கூடையளவு பிள்ளை - அது என்ன?

8. மேலே உள்ள படத்தில் இருப்பது யார்?

ஆசிரியர்
கோகுலம்
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை-97





5 மாலா தேடிய மாயப்பெண்!


கதை: விஜி படம்: சேகர்





அதெல்லாம் சரி. எனக்குப் பசி உயிர் போகிறது.
இந்தப் பகுதியில் ஒரே ஒரு மரத்தில் காய்க்கும் பழம் மட்டும்தான் விஷமற்றது.
மாலா பழங்களை வாங்கினாள்.
ஆஹா! நல்ல சுவையாக இருக்கிறது.
சீக்கிரம் பசிக்காது. மீதிப் பழங்களை எடுத்துக் கொண்டு கிளம்பு.
பொன்னி, ஓய்வெடுத்துட்டுக் கிளம்பறேன்.



அமாவாசைக்கு இன்னும் ஒரு வாரம்தான் இருக்கு மாலா.
அதனால் என்ன?
அமாவாசையின் போது அவள் சக்தி குறையும். உனக்கும் சுலபமாக இருக்கும்.
சரி, கிளம்பறேன். விரைவில் உன்னை உன் உருவத்தில் சந்திக்கிறேன்.


நன்றி மாலா. நான் காத்துக் கொண்டிருப்பேன்.


மாலா கிளம்பினாள். வழியில் -
ஐயோ! கோழிக் குஞ்சை, கழுகு வட்டமிடுதே!
மாலா அம்பை எடுத்தாள் -
என்னைக் கொல்லாதே!
சரி. கோழிக் குஞ்சை விட்டு விடு.
விட்டுட்டேன். உனக்கு ஆபத்தான நேரத்தில் என் உதவி நிச்சயம் கிடைக்கும். வரேன்.
நீண்ட நேரம் நடந்தாள் மாலா.
நன்றி. உன் உதவி எனக்குத் தேவைப் படும்.
இந்த மாயக்காரி எங்கே இருக்கிறாளோ? தாகம் எடுக்குது. தண்ணீர் குடிக்கலாம்.
(தொடரும்)



மடப்புறா!



ஒற்றுமை

எங்கள் ஊரில் சில வாரங்களுக்கு முன் அம்மனுக்குக் கும்பாபிஷேகம் நடத்தினர். அதில் பல போட்டிகள் நடத்தப்பட்டன. வழுக்கு மரம் ஏறுதல் என்ற ஒரு போட்டியும் நடத்தப்பட்டது. ஒரு நீண்ட பைப்பில் கிரீஸ் தடவி பலரும் ஏறி வழுக்கி, வழுக்கி விழுந்தனர். மூன்று மணி நேரம் ஆகியும் ஒருவர் கூட ஏறவில்லை. பிறகு அனைவரும் ஒன்றிணைந்து கூட்டு முயற்சியுடன் ஏறி வெற்றி பெற்று ஊர் மக்கள் அனைவரின் பாராட்டையும் பெற்றனர். இறுதியில் ஒலி பெருக்கியில், "ஒற்றுமையே வலிமை தரும்" என்று கூற ஊர் மக்கள் கரொலி எழுப்பி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

– வே. சுபஸ்ரீ,
ஒன்பதாம் வகுப்பு
அ.மே.நி.பள்ளி, நல்லூர்.

புறா

எங்கள் அம்மா மாடியில் நெல் காய வைத்தார். பறவைகள் வந்து தின்னாமல் இருக்க சிறிய வலை ஒன்றைப் போட்டு வைத்தார். சற்று நேரம் கழித்து பார்த்த போது அதில் ஒரு புறா சிக்கியிருந்தது. அதைப் பிடித்த அம்மா "அட இது மாடப்புறா" என்றார். அப்போது அங்கு வந்த என் தம்பி "இது மாடப்புறா கிடையாது. வலையில் தெரியாமல் மாட்டிக் கொண்ட 'மடப்புறா'" என்றான். அதைக் கேட்டு நாங்கள் அனைவரும் சிரித்துக் கொண்டிருந்த நேரத்தில் புறா தப்பித்துச் சென்று விட்டது.

– பெ. நடராசன்,
பத்தாம் வகுப்பு,
ஸ்ரீ சேது மாணிக்க உயர்நிலைப் பள்ளி, மேலச்சீதை,
இராமநாதபுரம்.

உப்பு

வீட்டில் அனைவரும் அமர்ந்து



சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது தம்பி மோரில் கலந்து கொள்ள கொஞ்சம் உப்பு கேட்டான். தங்கை வேகமாக எழுந்து சென்று உப்பு கொண்டு வந்து கொடுத்ததும் அவளிடம் "உன்னை எப்போதுமே மறக்க மாட்டேன்" என்றான் தம்பி. 'ஏன்?' என்று தங்கை கேட்க, "உப்பிட்டவரை உயிர் உள்ளளவும் நினை' என்று பெரியவர்கள் கூறி இருக்கிறார்களே" என்று அவன் கூறியதும் அனைவரும் சிரித்தோம்.

— அ. பேச்சியப்பன்,
ராஜபாளையம்.



சூடான செய்தி


ஒருநாள், என் அப்பா பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். பேப்பர் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டிருந்ததால் அதனை ஊதி ஊதிப் படித்துக் கொண்டிருந்தார். அப்போது எங்கள் வீட்டிற்கு வந்த என் மாமா அப்பாவிடம், "என்ன மாமா, பேப்பர்ல இன்னைக்கு நிறைய சூடான செய்திகள் வந்திருக்கா?'' என்று கேட்டார். என் அப்பா "ஏன் கேட்கிறே?" என்றார். "இல்ல, பேப்பரை ஊதி ஊதிப் படிக்கிறீங்களே அதனால் கேட்டேன்" என்று சொல்லவும் வீடே சிரிப்பில் அதிர்ந்தது!

- க. தனலட்சுமி, மயிலாடுதுறை.

லட்டு

எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலிருக்கும் அக்கா திருப்பதிக்குப் போய் வந்தார். திருப்பதி பிரசாதமான திருப்பதி லட்டை எங்கள் வீட்டிற்கு வந்து கொடுத்தார். எங்கள் அம்மா என் தம்பியிடம் கொடுத்து "சாப்பிடு'' என்றார். அதற்குள் நான் "திருப்பதி லட்டு, நல்லா திருப்தியா சாப்பிடு" என்றேன். உடனே எங்கள் அப்பா, "திருப்தியா சாப்பிட சோறா, இல்லை இட்லியா? இது பிரசாதம்டா" என்று சொன்னார். வீட்டிலே எல்லோரும் சிரித்து விட்டோம்.


— சி. இராஜசேகரன்,
இராஜபாளையம்.




ஃபோன்!

அப்பாவைப் பார்க்க அவர் நண்பர் ஒருவர் வந்திருந்தார். பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப்படும்போது "நண்பர் ஒருவருக்கு ஃபோன் பண்ணணும், நம்பர் சந்தேகமாயிருக்கு'' என்றார். உடனே அப்பா ''ஞாபகப்படுத்தி போட்டுப் பாருங்க, நம்ம வீட்லதான் ஃபோன் ஓர்க் பண்ணுதே" என்று கூறினார். "ஒரு கால் நான் போடுற நம்பர் தப்பாயிட்டா?" என்று இழுத்தார் அவர். அப்போது அங்கு நின்று கொண்டிருந்த நான் ''அதனால என்ன? ஒரு CALL வேஸ்ட் ஆகும். பரவாயில்லை போட்டுப் பாருங்க" என்றேன். பின்னர் அவர் போட்டது சரியான எண்ணாகவே இருந்தது. 'சுட்டிப் பையன்' என்று செல்லமாகத் தட்டிச் சென்றார் என்னை.

— த. பரதன்,
திருவாரூர்.





காற்றினிலே

மாலை பள்ளியில் வகுப்பு முடியும் நேரத்தில் ஆசிரியர் கணேசன் அழைப்பதாகப் பூங்குன்றனிடம் அங்கு வந்த ஒரு மாணவன் கூறினான்.

ஆசிரியர் அறையில் அவர் இவனைக் கண்டதும் "வா பூங்குன்றா!" என்றார்.

"என்ன விபரம் சார், அழைத்தீர்களாமே?" - பூங்குன்றன்.

அவர் அருகில் வேறு இரண்டு பேர் அமர்ந்திருந்தனர்.

"இவர் பேரு நரசிம்மன், வனவியல் ஆய்வாளர். இவர் முருகேசன், மூலிகைகள் ஆராய்ச்சியாளர். நம்ம பக்க மலை பகுதிகளில் செங்காந்தள் அப்படிங்கிற ஒரு கொடி இருக்குன்னு இப்ப கண்டு பிடிச்சிருக்காங்களாம். இரண்டாயிரம் வருசங்களுக்கு முன்னே நம்ம சங்க இலக்கிய நூல்கள்ல செங்காந்தள் பூக்களைப் பற்றி ரொம்பவும் சொல்லியிருக்காங்க. இவங்க அதைப் பார்த்து அந்தக் கொடி, இலை, பூ, இவையெல்லாம் மருத்துவரீதியில் எதற்கெல்லாம் ஆகும் அப்படிங்கிற ஆராய்ச்சி செய்யப் போறாங்க. நீங்க அடிக்கடி மலைக்குப் போயி அங்க ஒரு ஆதிவாசிப் பையனைப் புடிச்சி பாத்துட்டு வருவீங்கள்ள?"

"ஆமாம் சார்! நான் என்ன செய்யணும்?"

''நாங்க மூணு பேரும் நாளைக்கி வர்றோம். நீ இன்னும் ரெண்டு பையங்களைச் சேர்த்துக்கிட்டு எங்க வண்டி பின்னால உட்கார்ந்து வாங்க. அந்தப் பழங்குடி பையனைப் பார்த்து ஏற்பாடு செய்யணும்.''

''ரொம்ப நல்லது சார். அப்ப நாளைக்குக் காலையில கலை மன்றம் பக்கம் ஆறு மணிக்கு நிக்கிறோம். நீங்க வந்துருங்க, மலைக்குப் போயிட்டு வரலாம்'' - பூங்குன்றன்.

''சரி, சரி பெல் அடிச்சாச்சு. இப்ப நீ வீட்டுக்குப் புறப்படு'' - ஆசிரியர்.

மறு நாள் காலை கலை மன்றம் முன்பு பூங்குன்றன், அவன் தங்கை பூங்கோதை, குட்டி ராஜா மூவரும் நின்றிருந்தனர். பெரியவர்கள் மூவரும் வண்டிகளில் வந்ததும் பின்னால் ஏறிக் கொண்டு முடங்கியாறு சாலை வழியாகப் புறப்பட்டார்கள்.

அடிவாரம் வந்ததும் சித்தாஸ்ரமத்தில் வண்டிகளை நிறுத்திவிட்டு, ஆதிவாசி குடிசைகள் பக்கம் சென்ற பூங்குன்றம் ''நீலா'' என்று குரல் கொடுத்தான்.

அங்கிருந்து வந்த ஒரு பெரியவர் ''நீலன் இப்பதான் போனான். நீங்க கொஞ்சம் இந்தப் பாறையில இருங்க. நான் போயி அவனை அனுப்புறேன்'' என்றார்.

வந்த செய்தி!

அவர் சென்ற சிறிது நேரத்தில் நீலன் ஓடி வந்தான்.

''என்ன சாமிகளா, இப்பதான் வந்திகளா? என்ன வேணும் உங்களுக்கு?'' என்று கேட்டான்.

பூங்குன்றன் விபரமாகக் கூறினான்.

சிறிது யோசித்த நீலன், ''செங்காந்தப் பூவு பல்லிளிச்ச கணவாய் பக்கத்துல இருக்கு. அடிவாரம் வழியா வடக்கே மூணு மைல் நடந்து போயி அங்க ஒரு மைல் மலையில ஏறணும்'' என்றான்.

''போவோம் நீலா. அதுக்குத்தானே வந்திருக்கோம்.''

''சரி நீலா, டிபன் கொண்டு வந்திருக்கோம். போற பாதையில சாப்புட்டுக்கலாம், புறப்படுப்பா.''

''சரி சாமி, அங்க எங்க சனங்க இருக்காங்க. அவங்களுக்குச் சொல்லிவிட்டால் நாம போகும்போது செங்காந்தள் பூ உள்ள இடத்தில் பாதையைச் சரி பண்ணி வப்பாங்க'' - நீலன்.

''ஏய், என்னப்பா புறப்படுங்குறேன். நீ என்னமோ சொல்லி விடணுமுன்னு சொல்றியே?.'' - பூங்குன்றன்.

''சரி, வாங்க'' என்ற நீலன் அவர்களை ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்றான்.

ஒரு பாறை இடுக்கில் கையைவிட்டு மெக்கப் போன் போன்ற ஒரு பழைய தகரக் குழாயை எடுத்து ''ஊம்ம்ம்'' என ஊதினான்.

''என்னப்பா இது?''

''எங்க சனங்கள காட்டுக்குப் போகச் சொல்ல'' என்று சொல்லிவிட்டு மரத்துக்கு அடுத்த பாறைக்குச் சென்றான். அங்கு ஒரு பாறை இடுக்கில் வில் ஊன்றியிருந்தது. அதன் அருகில் சென்றான். வில்லின் நாண் வடக்கே பார்த்து இருந்தது. ஒரு கம்பியைக் கீழே இருந்து எடுத்து வீணைத் தந்தியை மீட்டுவது போல மெல்லிய ஒலிகளை எழுப்பினான்.

பின்னர் ''சரி, வாங்க சாமி போகலாம்'' என்று கிளம்பினான்.

''நீலா இங்க வாப்பா.'' ஏதோ ரகசிய வேலை பண்ற மாதிரி செய்யறியே என்ன?''

''அதானே... குழல் ஊதினே, வில்லுல ஏதோ செஞ்ச!''

''சாமி, நான் ஏதோ விளையாட்டா செஞ்சிருப்பேன்.'' என்றான் நீலன்.

அவர்கள் அடிவாரத்தில் வடதிசை ஒற்றையடிப் பாதையில் நடந்து சென்றனர். சில வண்டுகளின் 'கீய்ய்'

கொ.மா. கோதண்டம்

என்ற ஒலி கேட்டுக் கொண்டிருந்தது.

பெரிய மலையணில்கள் கிளைகளில் தாவி ஓடிக் கொண்டிருந்தன. ஒரு பகுதியில் குரங்குகள் சத்தமிட்டவாறே கிளைகளில் தாவிச் சென்று கொண்டிருந்தன. வெயில் நேரமாயினும் மரங்களின் அடர்த்தியால் வெயில் தெரியாமல் குளுகுளுவென்றிருந்தது. அவர்கள் பல்லிளிச்சான் கணவாய் அருகில் வந்து விட்டனர்.

மழையில்லாததால் ஆற்றில் தண்ணீர் வரவில்லை, ஆங்காங்கு கேணிகளில் தண்ணீர் இருந்தது. ஆற்றில் இறங்கி ஒரு கேணி அருகே பாறையில் அமர்ந்து அவர்கள் கொண்டு வந்திருந்த சிற்றுண்டிப் பொட்டலங்களைப் பிரித்து, பேசிக் கொண்டே சாப்பிட்டனர்.

''ஏம்ப்பா, இதுக்குப் பல்லிளிச்சாங் கணவாய்ன்னு பேரு எப்படி வந்தது?'' முருகேசன் கேட்டார்.

''கொஞ்சம் மழை பெய்தாலும் ஊருக்குப் பளிச்சினு பல்லு இளிச்ச மாதிரி வெள்ளையா இதுல தண்ணீர் வர்றது தெரியும். அதனால பல்லு இளிச்சமாதிரின்னு பேரு வந்ததாம்.'' - நரசிம்மன் கூறினார்.

''தண்ணீர் கொஞ்சமா வர்றதால பல்லி குடிக்க மட்டும்தான் இருக்குமுன்னு பல்லி குடிச்ச கணவாய்ன்னும் சொல்லுவாங்க'' என்றான் நீலன்.

சாப்பிட்டு முடிந்ததும் எழுந்து கரை வழியே மலையேறி நடந்தனர்.

ஓர் இடத்தில் நீலன் அவர்களை நிறுத்தினான்.

''அதோ அங்கே பாருங்க!''

''ஆ... யானை'' என்று கத்தினாள் பூங்கோதை.

''குட்டி யானை அம்மாகிட்ட பால் குடிக்கிது'' என்றான் பூங்குன்றன்.

''ஆமாம், யானை எதையும் தும்பிக் கையாலேதானே எடுத்து வாய்க்குள்ள வைக்கும். இந்தக் குட்டி நேரடியா பால் குடிக்குதே'' வியப்போடு கேட்டான் குட்டி ராஜா.

''சாமி, குட்டி யானைக்குத் தும்பிக்கை ரொம்ப சிறிசு. அதால வாயால தான் பால் குடிக்க முடியும். தண்ணீர் ரொம்ப இருந்தால் யானைகள் ரொம்ப நேரம் தண்ணியில விளையாடிக்கிட்டே குளிக்கும். குட்டி யானை தும்பிக்கையால சிலம்பம் சுத்துற மாதிரி சுத்தி சுத்தி விளையாடும்.''

''நீலா, இன்னிக்கு ஒரு அருமையான காட்சியை உன்னால பார்த்தோம். நன்றிப்பா!'' என்றார் ஆசிரியர் கணேசன்.

சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அவர்கள் மேலே ஏறி நடந்தனர். எதிரே ஏதோ ஆரவார சத்தம் கேட்டது. இவர்களைப் பார்த்து ஆதிவாசி மக்கள் சிலர் வந்து கொண்டிருந்தனர்.


ஒரு பானை வாயில் தோலைக்கட்டி மேளம் போல ஒருவன் அடித்துக் கொண்டு வந்தான். ஒருவன் மரத்தாலான குழாயில் வாய் வைத்து நாதஸ்வரம் போல வாசித்தான். ஒரு பெரியவர் வந்திருக்கும் மூவருக்கும் காட்டுப் பூக்களாலான மாலைகளை அணிவித்தவுடன் எல்லோரும் ''ஓ...''வென கோஷமிட்டனர்.

நீலன் மாலை போட்டவரைக் காட்டி ''இவர்தான் இங்க நாட்டாமை'' என்றான்.

சிறிது தூரம் சென்றதும் இவர்களை ஒரு பாறைமீது அமர வைத்து தேன் விட்டுப் பிசைந்த தினை மாவை இலைகளில் வைத்து வந்திருந்த அனைவருக்கும் தந்தனர்.

''சரி, செங்காந்தள் பூக்காடு எங்கே இருக்கு?'' என்று கேட்டார் கணேசன்.

''கொஞ்சம் இருங்க. அதைப் பின்னால பார்த்துக்கலாம். நீலா இங்க வா'' என்று அழைத்து ''அங்க வில்லு



ஜீவராசிகளிலேயே மிகவும் சுத்த மானது சுண்டெலிதான். அது நிமிடத்திற்கு மூன்று தடவை தன்னைத் துடைத்துக் கொள்கிறது. அதன் ஆயுளில் பாதி, சுத்தம் செய்து கொள்வதிலேயே செலவாகி விடுகிறது.

வச்சிருந்தியே, அதே மாதிரி வில்லு இங்க எங்க இருக்கு காட்டு'' என்றார் நரசிம்மன்.

''நானும் அதைத்தான் சந்தேகப்பட்டேன்'' என்றார் முருகேசன்.

''ஆமாம் நாம வர்றது இவங்களுக்கு எப்படி தெரிஞ்சது? சரியா மாலையோட வரவேற்பு செய்ய எப்படி வந்தாங்க!'' என்று கேட்டார் கணேசன்.

''எங்களுக்கு ஒண்ணும் புரியலையே'' என்றனர் மாணவ மாணவியர் மூவரும்.

''என்ன நீலா?'' நரசிம்மன் கேட்டதும்,

''என்ன வில்லு? எதுக்கு வில்லு?'' - மென்று விழுங்கினான் நீலன்.

''நீலா, ஒண்ணும் மறைக்காம சும்மா சொல்லுப்பா.''

''வந்து... இந்த விஷயம் எங்க சனங்களைத் தவிர மத்தவங்களுக்கு நாங்க இதுவரைக்கும் சொன்னது கிடையாது. இன்னக்கி நீங்க எப்படியோ கண்டு பிடிச்சிட்டீங்க. சரி வாங்க காட்டுறேன்'' என்ற நீலன், ஓர் இடத்தில் பாறையில் ஊன்றியிருந்த வில்லைக் காட்டினான். வில்லின் நாண் தென் திசையைப் பார்த்து இருந்தது.

நரசிம்மன் அருகே சென்றார். கீழே கிடந்த சிறு கம்பியை எடுத்து நாணில் மெல்ல தட்டி ஓசை எழுப்பினார். மற்றவர்கள் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

''டிரிங்...'' என்ற ஓசை எழுந்தது.

''இதுக்கு என்னப்பா அர்த்தம்?''

''சாமி, அந்தக் கம்பியைத் தாங்க'' என்றான் நீலன்.


''டிரிங். இது இங்க வாங்க!''

''டிடிர்ங். இது நாங்க வர்றோம்.''

''ரிங். இது ஒரு ஆளு''

''ரிங் சிங்'. இது இரண்டாளு. இப்படியே இதால இருபது வார்த்தை வரைக்கும் நாங்க பரிமாறிக்குவோம். இந்தச் சத்தம் அங்க உள்ள வில்லுலயேயும் கேட்கும், முதல்ல குழல் ஊதுனது வில்லுப்பக்கம் வந்து கேளுங்கன்னு சொல்லுறதுக்கு'' என்றான் நீலன்.

''இது எவ்வளவு காலமா வச்சிருக்கீங்க?''



சுறாமீனின் மோப்ப சக்தி மிக நுட்பமானது. 200 கி.மீ தூரத்தில் கடல்நீரில் ஒரு துளி மனித ரத்தம் கலந்திருந்தாலும், இவை அதை உணர்ந்து, அங்கு விரையும்.

- கரூர் குட்டிபிரசன்னா

''சாமி, இது எங்க தாத்தா காலத்துல செஞ்சாங்களாம். வில்லுகளை எடுத்து ஒளிச்சி வச்சிட்டுப் போயிட்டாங்க. இந்த நாட்டாமைதான் எங்கேயோ தேடிக் கண்டுபிடிச்சி எடுத்து தகவல் சொல்ல, ஏழெட்டு வருஷமா நாங்க இதால பேசுறோம்.''

''நீலா, ஒரு காலத்துல இது இப்படி இருந்ததுன்னு படிச்சிருக்கோம். இது தான் நம்ம ரேடியோவுக்கு முன்னோடி. ஒரே திசையில நேருக்கு நேர் பார்த்திருக்கும் வில்களின் நாணில் ஒன்றிலிருந்து ஒலி எழுப்பினால் அதே ஒலி அடுத்த வில்லின் நாணில் எழும்பும் என்பது முற்கால பழங்குடி மக்கள் கண்டுபிடிப்பு'' என்றார் நரசிம்மன்.

''இன்னிக்கு ஒரு முக்கியமான விஷயத்தைப் பார்த்திட்டோம். இதைப் பற்றியே பேசி ஆராய்ச்சி பண்ணலாமே! செங்காந்தள் ஆராய்ச்சிக்கு இன்னொரு நாள் வரலாமே'' என்றார் கணேசன்.

''அப்படியே செய்யலாம்'' என்ற பூங்குன்றனும், குட்டி ராஜாவும் நீலனைக் கட்டிப் பிடித்து தூக்கினார்கள்.

மூன்று பெரியவர்களும் ஆளுக்கு நூறு ரூபாய் எடுத்து நீலனிடம் தந்து ''இவங்களுக்குத் தந்துருப்பா'' என்றனர்.

''சாமி, இந்த ரூபாய்க்குப் போர்வை வாங்கி அடுத்த தடவை வரும்போது கொடுங்க போதும், ரூபாயா வேண்டாம். இவங்களுக்குச் செலவழிக்கத் தெரியாது'' - நீலன்.

அவர்கள் அது பற்றியே பேசிக் கொண்டு இறங்கலானார்கள்.

தி.சே. அறிவழகன், திருப்புலிவனம்.

? மாரடைப்பு நோயின் **(Heart Attack)** அறிகுறிகள் என்ன?

! மாரடைப்பு நோயின் மிக முக்கிய அறிகுறி நெஞ்சுவலி ஆகும். நெஞ்சின் இடதுபுறத்தில் அல்லது மையப்பகுதியில் கடுமையாக அழுத்துவது போன்ற வலி ஏற்படும். மார்பின் குறுக்காக ஒரு கயிற்றைக் கொண்டு இறுகக் கட்டியது போன்ற உணர்வு இருக்கும். அல்லது நெஞ்சில் ஒருவர் கடுமையாக அழுத்துவதைப் போலவோ, நெஞ்சுக்குழிக்குள் ஏதோ ஒரு பொருள் சென்று அடைத்துக் கொண்டது போலவோ இருக்கும். நெஞ்சில் தாங்க இயலாத இறுக்கம் ஏற்படும். சிலருக்குத் தொண்டையில் ஏதோ அழுத்துவது போல் தோன்றும். இந்த வலி முன் கழுத்து, தாடை, இடது தோள்பட்டை, இடதுகை மணிக்கட்டு மற்றும் விரல்கள் ஆகியவற்றுக்குப் பரவும். சிலருக்கு வலது தோள் பட்டை, வலது கை மணிக்கட்டு மற்றும் விரல்கள் ஆகியவற்றுக்கும் மார்பின் கீழ்ப்பகுதியிலும் வயிற்றின் மேல் பகுதியிலும், முதுகுப்பகுதியிலும் வலி ஏற்படலாம். குமட்டல், வாந்தி ஆகியவை ஏற்படலாம். நாடி குறைந்து இரத்த அழுத்தமும் குறைந்து விடும். மயக்கம் உண்டாகும். சுயநினைவு போய்விடும்.

எல்லோருக்கும் எல்லோருடைய ரத்தமும் சேருமா?

க. முருகவேல், தர்மபுரி.

? கீல்வாதக் காய்ச்சல் **(Rheumatic Fever)** என்றால் என்ன? அறிகுறிகள் என்ன? எவ்வாறு சிகிச்சை பெறுவது?


! ஸ்ட்ரெப்டோகாக்ஸ் பயோஜீன்ஸ் எனும் பாக்டீரியா கிருமிகளால் கீல்வாதக் காய்ச்சல் ஏற்படுகிறது. அசுத்த உணவு, குடிநீர், காற்று மூலம் இக் கிருமிகள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுகின்றன. இவை நோயாளியின் தொண்டையை முதலில் தாக்குகின்றன. அங்கு அழற்சியை உண்டாக்கி, புண் ஏற்படுத்தி, காய்ச்சல் வரச் செய்கின்றன. அப்பொழுது இரத்தத்தில் இக் கிருமிகளுக்கு எதிர் அங்கங்கள் **(Antibodies)** உற்பத்தியாகின்றன. ஸ்ட்ரெப்டோகாக்கஸ் பாக்டீரியாக்களின் அமைப்பும் எலும்பு மூட்டு மற்றும் இதயத் தடுக்கிதழ்களின் அமைப்பும் ஒன்று போலிருப்பதால், இவை நோய்க் கிருமிகளைத் தாக்கி அழிப்பதோடு, எலும்பு மூட்டுகளையும் இதயத் தசைகளையும் பாதிக்கின்றன. இதன் விளைவாக எலும்பு மூட்டுகளும் இதயத் தடுக்கிதழ் **(Heart Valves)** களும் பழுதுபடுகின்றன. 5 வயதிலிருந்து 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளையும் வாலிப வயதினரையும் இந்த நோய் எளிதில் பாதிக்கிறது. பாக்டீரியா கிருமிகள் உடலுக்குள் நுழைந்த 7 நாட்களிலிருந்து 10 நாட்களுக்குள் நோயின் அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கும். துவக்கத்தில் கடுமையான காய்ச்சல், தொண்டை வலி, உணவை விழுங்குவதில் சிரமம், கழுத்திலுள்ள நிணநீர் முடிச்சுகள் வீங்குதல் போன்ற அறிகுறிகள் ஏற்படும். இது நோயின் முதல் கட்டமாகும். இரண்டிலிருந்து நான்கு வாரங்களுக்குப் பிறகு, நோயின் இரண்டாம் கட்டம் துவங்கும். இப்போது மீண்டும் காய்ச்சல், எலும்பு மூட்டுகளில் வலி, வீக்கம் முதலியன தோன்றும். பெரும்பாலும், முழங்கால், முழங்கை, தோள், மணிக்கட்டு, கெண்டைக்கால் மூட்டு போன்ற பெரிய மூட்டுகளே பாதிக்கப்படும். ஆனால், எல்லா மூட்டுகளும் ஒரே நேரத்தில் பாதிக்கப்படுவதில்லை. வலியும் வீக்கமும் ஒரு மூட்டிலிருந்து மற்றொரு மூட்டிற்கு மாறிக் கொண்டிருக்கும். இரண்டாம் கட்டத்தில் தோன்றும் அறிகுறிகள் இதயம் தாக்கப்பட்டுள்ளது என்பதற்கான அறிகுறிகளாகும். கீல்வாதக்காய்ச்சல் ஒருமுறை வந்து விட்டால், தொடர்ந்து 5 வருடங்களுக்கு அல்லது நோயாளிக்கு 25 வயது ஆகும் வரை, 3 அல்லது 4 வாரங்களுக்கு ஒருமுறை, பென்சதீன் பெனிசிலின் ஊசி மருந்து செலுத்தப்பட வேண்டியது முக்கியம். அப்போதுதான் இந்தக் காய்ச்சலை

அடியோடு ஒழிக்க முடியும்.

ச. மணிமேகலை,
திருப்பூர் - 1.

? இதயத்தில் செய்யப் படும் அறுவை சிகிச்சை யாரால், எப்போது, எங்கு ஆரம்பிக்கப்பட்டது?

! இதயத்தில் அறுவை சிகிச்சை **(Heart Surgery)** செய்யும் முறை 1897-ஆம் ஆண்டில் துவங்கியது. ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த லட்விக்ரேன் என்னும் அறுவை சிகிச்சை மருத்துவர் இதயத்தில் அடிபட்டு வந்த ஒரு நோயாளிக்குக் கிழிந்திருந்த அவருடைய இதயச் சுவரில் தையல் போட்டு சரிசெய்தார். இதுவே உலகில் முதன் முறையாகச் செய்யப்பட்ட இதய அறுவை சிகிச்சையாகும். பிறகு 1930ல் ராபர்ட் கிராஸ் எனும் அமெரிக்க அறுவை சிகிச்சை மருத்துவர் முதன் முதலில் ஒரு குழந்தையின் 'சுருங்காத கருத்தமனி' எனும் பிறவி இதயக் கோளாறைச் சரிசெய்தார். இதன் பின்னர், 1944ல் ஹெலன் புருக் டசிக் மற்றும் ஆல்பிரட் பிலாலக் எனும் இரண்டு அமெரிக்க அறுவை சிகிச்சை மருத்துவர்கள் உடலில் நீலநிறத்துடன் பிறக்கும் குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை செய்யும் முறையைக் கண்டுபிடித்தனர். இதுவரை செய்யப்பட்ட இதய அறுவை சிகிச்சைகள் எல்லாமே இதயம் துடித்துக் கொண்டிருக்கும் போதே செய்யப்பட்டவை. இதயத் துடிப்பை நிறுத்தி, இதயச் சுவர்களைப் பிளந்து இதய அறுவை சிகிச்சை செய்யும் முறை ஆராய்ச்சி நிலையில் இருந்தது. 1953ல் மற்றொரு அமெரிக்க அறுவை சிகிச்சை மருத்துவர் ஜான் கிப்பன் சுமார் இருபது வருட முயற்சிக்குப் பிறகு 'இதய நுரையீரல் இயந்திரம்' **(Heart Lung Machine)** எனும் கருவியைக் கண்டுபிடித்து, இதயத் துடிப்பைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து, திறப்பு இதய அறுவை சிகிச்சைகளைச் செய்யும் முறைகளை நடைமுறைப்படுத்தினார். பிறவியிலேயே இதய மேலறை இடைச்சுவரில் துளை கொண்ட ஒரு பெண்ணுக்கு இந்த இயந்திரத் தைப் பயன்படுத்தி இதய அறுவை சிகிச்சை செய்து சரிசெய்தார். இவருக்குப் பிறகுதான் இதய அறுவை சிகிச்சை என்பது மிக வேக மாக வளர்ந்தது.



டாக்டர். கு. கணேசன்

அம்சவேணி, நாங்குநேரி.

? எல்லோருக்கும் எல்லோருடைய ரத்தமும் சேருமா, டாக்டர்?

! சேராது. யார் யாருக்கு யாருடைய ரத்தம் சேரும் என்பதை அருகில் தரப்பட்டிருக்கும் அட்டவணையில் தெரிந்து கொள்.

ஒருவருடைய இரத்த வகை	இவர்களுக்கு இரத்தம் கொடுக்கலாம்	இவர்களிடமிருந்து இரத்தம் பெறலாம்.
'ஏ' வகை	'ஏ' மற்றும் 'ஏ.பி.' வகைகள்	'ஓ' மற்றும் 'ஏ' வகைகள்
'பி' வகை	'பி' மற்றும் 'ஏ.பி' வகைகள்	'ஓ' மற்றும் 'பி' வகைகள்
'ஏ.பி.'வகை	'ஏ.பி.' வகை	'ஓ', 'ஏ', 'பி' மற்றும் 'ஏ.பி.' வகைகள்
'ஓ' வகை	'ஓ', 'ஏ' 'பி' மற்றும் 'ஏ.பி.' வகைகள்	'ஓ' வகை


கோகுலம்
போஸ்டர்
BRITANNIA



வீரேந்திர
சேவக்

சார் தபால்

"**து**ண்டில் நெய்யை முடிந்த எழுமலை என்ற கதை மிகவும் சிரிப்பாக இருந்தது. திருவேலன் காப்பாற்றிய ஆட்டுக்குட்டி கதை மனதை நெகிழச் செய்துவிட்டது. 'இயற்கையைப் பாதுகாப்போம்' போஸ்டர் அருமை" என்கிறார் நல்லூரிலிருந்து ஆ. சந்தியா.

திருச்சியிலிருந்து வி.ஆர். கிருத்திகா "ஓடிப் போன அஹமது, தான் தப்பியதுடன் மற்ற வரையும் காப்பாற்றிவிட்டது மகிழ்ச்சியளித்தது. உழைப்புக்கு நல்ல பலன் உண்டு என்று படக் கதை உணர்த்தியது. எது சிறந்தது? படக் கதையில் படங்கள் நன்றாக இருந்தன" என்கிறார்.

கோகுலம் சுழல் கோப்பை

கோகுலம் இதழ்களில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப் புகள் அதிகம் இடம் பெறுகின் றனவோ அப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. வத்தலகுண்டு, செந்துறை, ஆண்டி பட்டி, மேலச்சீத்தை பள்ளிகளைத் தொடர்ந்து இந்த ஆண்டு கோப் பையை வெல்லப் போகும் பள்ளி எது? இன்னும் ஒரே ஒரு மாதம் காத் திருங்கள்; பாராட்டத் தயாராகுங்கள்!

ரசிக்கும்படியான அனுபவங்கள்!

"**தி**மிங்கிலங்கள் பற்றிய சுவையான தகவல்களைப் படித்து மகிழ்ந்தேன். திமிங்கிலங்களின் மூதாதையர் பற்றிய தகவல் ஆச்சரியப்படுத்தியது. நடு பக்க போஸ்டர் கண்ணைக் கவர்வதாக இருந்தது" என்கிறார் மேலச்சீத்தையிலிருந்து மோ. கீதாஞ்சலி.

நல்லூரிலிருந்து சு. மொய்தீன் "அக்டோபர் இதழில் 1000 ரூபாய் பரிசு போட்டியில் எனக்குப் பரிசு கிடைத்திருக்கிறது. என் சந்தோஷத்திற்கு அளவில்லை. திமிங்கிலம் பற்றிய தகவல் பயனுள்ளதாக இருந்தது" என்கிறார்.


"**தே**யிலை பற்றிய கட்டுரையைப் படித்ததும் புத்துணர்ச்சி ஏற்பட்டது. சின்னமனூர் சின்னப்பட்டாளத்தில் சிட்டழகு கஷ்டப்படுவதைப் பார்க்கும்போது எனக்கும் கஷ்டமாக இருக்கிறது" என்கிறார் கோவையிலிருந்து வே. தீபன்.



முதுகுளத்தூரிலிருந்து ஆர். பிரசன்னா, "கோகுலம் பின் அட்டைக்கு ஒரு திருஷ்டி சுற்றிப் போடுங்கள். வண் ணத்துப் பூச்சியின் பிறப்பை எவ்வளவு அழகாக காட்டியிருக்கிறது! கேட்கட்டுமா டாக்டர் பகுதி அனைவரும் படித்து அறிந்து கொள்ள வேண் டிய பகுதி" என்கிறார்.

எங்கள் பள்ளியில் நடந்தது பகுதியில் முரண்பாடு, தலையெழுத்தைத் திருத்திய மாணவி, கிண்டல் போன்ற அனுபவங்கள் மிகவும் ரசிக்கத் தக்கவையாக இருந்தன. வலையில் சிக்கியவை பகுதி பல விஷ யங்களை எங்களுக்கு அறிமுகப்படுத்து கிறது" என்கிறார் பரங்கிப்பேட்டை யிலிருந்து என்.வேணி.

குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

1. தீபாவளியின்போது சாப்பிட இது செய்யப்படும் (5)

4. ஒரு கதை சந்தோஷமாக முடிவதை ______ ஆக முடிவது என்று கூறுவர் (3)

6. வேல், வில், கத்தி போன்றவை போர் ______ கள் (3)

11. கம்ப்யூட்டர் (3)

12. தாவரங்களின் நிறம் (3)

வலமிருந்து இடம்

3. சிப்பியின் உமிழ் நீரிலிருந்து உருவாகும் இது, ஆபரணங்களில் பதிக்கப்படுகிறது (3)

10. அரச, ஆல மரங்களைப் போல் இதுவும் ஒரு மரம் (3)

13. பர்மாவின் இன்னொரு பெயர் (5)

மேலிருந்து கீழ்

1. வாணவேடிக்கை (4)

2. ஒலி (4)

3. அந்தக் காலத்தில் வீட்டின் நடுவில் வெளிச்சத்திற்காக விடப்படும் திறந்தவெளி (4)

5. ஓலைச் சுவடிகளுக்கு இந்த மரத்தின் ஓலைகளைத்தான் பயன்படுத்தினர் (2)

8. உயரமான இடம், மரங்களில் ஏற இது அவசியம் (2)

9. கொடியில் காய்க்கும் கனி (4)

10. திருநாவுக்கரசு நாயனார் இப்படி அழைக்கப்பட்டார் (4)

11. பருந்து (4)

கீழிருந்து மேல்

6. கோயில் கோபுரத்தின் உச்சியில் இருப்பது (4)

7. ______ம் மருந்தும் மூன்று நாளைக்குத்தான் என்று ஒரு பழமொழி உண்டு (4)

12. விசேஷங்களில் இதைத் தெளித்து வரவேற்பார்கள் (4)

13. ஒளி உமிழும் பூச்சி (4)

விடை 49 ஆம் பக்கம்

- டி. விக்னேஷ்,
கே.கே.பி. மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
முத்துமங்கலம்,
ஈரோடு மாவட்டம்.

விசாரணை



8

'டொக்' என்று போனை வைத்தார் அதிகாரி. எதிரில் உட்கார்ந்திருந்த கனகசபை "என்ன சார் விஷயம்?" என்று பக்குவமாகக் கேட்டார்.

"எல்லாம் அந்த வீராபுரம் வெடிகுண்டு கேஸ்தான். ரயில் தண்டவாளத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டை நல்ல வேளையாக ரயில் ஊழியர் ஒருவர் லைன் சோதனையின்போது கண்டுபிடிச்சார். இல்லையா?"

"ஆமாம் சார்! அதுக்கு என்ன இப்போ? நான் கூட சற்று முன் அந்த ஃபைலைப் புரட்டிப் பார்த்துக்கிட்டு இருந்தேன். எதுவும் பிடிபடலை."

"ஒரு தகவல். இப்போ புள்ளி கிடைத்த மாதிரி தெரியுது. அதான் எஸ்.பி. சொல்லிக்கிட்டு இருந்தார்"

"என்ன... என்ன... சொன்னார் சார்?"

"அதை வெளிநாட்டு சதின்னு நினைத்தாலும் அந்த வெடிகுண்டு உள்நாட்டு தயாரிப்புதான்னு சோதனையில் தெரிய வந்துள்ளதாம். நாட்டு வெடிகுண்டு ரகம் மாதிரிதான் இருக்கு. ஆனால் தேர்ந்த தொழில் நுட்பத்தோடு தயாரிக்கப்பட்டிருக்குன்னு தெரியுது என்கிறார் எஸ்.பி.

ரா.சுந்தரமூர்த்தி

"அவை எங்கே தயாரிக்கப்படுகிறது என்பதைச் சீக்கிரத்தில் கண்டுபிடிக்கச் சொல்லி உள்துறையில் இருந்து பிரஷர் அதிகமாகி இருக்காம். அதான் எல்லா ஏரியாவையும் அலர்ட்டா இருக்கச் சொல்லி உத்தரவு வந்திருக்கு."

"நல்லது சார். நம்ம பகுதியில் கண்காணிப்பை அதிகப்படுத்திடலாம்."

"அது மட்டும் போதாது. உங்கத் தலைமையில் ஒரு ஸ்பெஷல் டீமைப் போட்டு சந்தேகப்படும்படியா எது நடந்தாலும் அதில் முழு கவனம் செலுத்த வேண்டும் என்று நினைக்கிறேன்"

"அதுவும் நல்லதுதான் சார். எனக்கு

சின்னமனூர் சின்னப்பட்டாளம்

நீங்க என்ன பொறுப்பைக் கொடுத்தாலும், நிச்சயம் சிறப்பாகச் செய்யத் தயாராக இருக்கிறேன் சார்.''

''உங்க திறமை மேல நம்ம டிபார்ட்மெண்ட்டுக்கு நல்ல நம்பிக்கை இருக்கு. அதனாலதான் ஸ்பெஷல் டீமுக்குத் தலைமையாகப் போட நினைக்கிறேன். சரி. டீமும் மத்த உறுப்பினர்களைப் பற்றியும் பின்பு பேசி முடிவு எடுப்போம். நீங்க எதையோ சொல்ல வந்தீங்களே அதைச் சொல்லுங்க.''



''சார், நம்ம பகுதியில் வர்ற சின்ன கிராமம் சின்னமனூர். அது ரொம்ப அமைதியான கிராமம். கிராம பஞ்சாயத்துக் கட்டுப்பாடுகளும் அதிகம். எந்தப் பிரச்னையானாலும் அங்கே பேசித் தீர்த்துக்குவாங்க. அதனால நமக்கு அங்கே வேலையே இருந்ததில்லை. ஆனா அந்த ஊர்ல இருந்து சில பள்ளிக்கூட மாணவர்கள் வந்து என்னைச் சந்தித்து சொன்ன விஷயங்கள் ஆச்சரியமாக இருந்தன.''

''என்ன சொல்றாங்க அவங்க?''

மேஜையில் இருந்த பேப்பர் வெயிட்டை கையால் உருட்டியபடியே உன்னிப்பாகக் கேட்டார் அதிகாரி.


''சார், அங்கே பண்ணையார் பரமானந்தம்னு ஒருத்தர். கிராமத்துல அவருக்குத் தான் நிலபுலங்கள் அதிகம். பரமபக்தர். கோயில் தர்மகர்த்தாவாகவும் இருக்கார். அதிகம் பேசமாட்டார். அடக்கமான ஆள். நேற்று வரை அவரைப் பற்றி மக்கள் கிட்ட எந்த அபிப்ராய பேதமும் கிடையாது. ஆனா அந்தச் சிறுவர்கள் புகார் சொல்வது அவர் மீதுதான்.''

''அப்படியா...! நீங்க சொல்றதைப் பார்த்தா சிறுவர்கள் சொல்வதையும் உதாசீனப்படுத்த முடியாது; அதே சமயத்தில் பண்ணையார் மீது நேராக நடவடிக்கை எடுப்பதும் சாத்தியமில்லை. அப்படிதானே?''

''ஆமாம் சார்! ஆனால் அந்தச் சிறுவர்கள் சொன்ன விஷயங்கள் பலமான சந்தேகத்தை ஏற்படுத்துது. அதோடு அந்தப் பண்ணையார் ஒரு சிறுமியைக் கடத்தி ஒளிச்சு வைச்சிருக்கிறதாகவும் தகவல். சிறுமியைப் பண்ணையார் ஆட்கள் தூக்கிட்டுப் போனதைச் சிறுவர்கள் நேரில் பார்த்திருக்காங்க. ஆனால் பண்ணையார் அந்தப் பெண்ணோட சொந்தக்காரங்க கிட்ட அந்தப் பெண்ணைக் கடத்தினதை மறைச்சு சாமர்த்தியமாகப் பேசி தப்பிச்சுகிட்டு இருக்கிறார்.''

''நிஜமாவா? கேஸ் ரொம்ப சிக்கலா இருக்கே. ஏன் பெண்ணைப் பெத்தவங்க புகார் செய்ய வரலை?''

''அதான் சொன்னேனே சார். கிராமத்துக் கட்டுப்பாட்டை மீறி சட்டுன்னு யாரும்



* கதர் விற்பனை செய்யும் கடைகளில் எல்லா வகை கதர் துணிகளுக்கும் தள்ளுபடி உண்டு. ஆனால் கொடி விற்பனைக்கு மட்டும் எப்போதும் தள்ளுபடி கிடையாது.

நம் தேசியக் கொடி ஆண்டுக்கு சராசரி பத்து லட்சம் ரூபாய்க்கு விற்பனையாகிறது.

- பி. சுசீலா, உடுமலை

வெளியே வரமாட்டாங்க. அங்கே எதையும் முன் நின்று முடிவு செய்கிறவர் பண்ணையார்தான். அவர் கிராமத்து ஆட்கள் போலீஸுக்குப் போகாம முட்டுக்கட்டை போடுவார். அதை மீறி வர்றது அவ்வளவு சுலபமில்லைன்னு நினைக்கிறேன்."

"சிறுவர்கள் சொல்வதை நம்பி நாம என்ன செய்ய முடியுமுன்னு நினைக்கிறீங்க?"

"சிறுவர்கள் தனியாக வந்தால்கூட யாரோ தூண்டிவிடுறாங்க, கிராமத்து உட்பூசல்ன்னு நாம ஒதுக்கிடலாம். ஆனா அவங்க வந்தது ஒரு வாத்தியார்கூட, அதுவும் அவர் என் சொந்த அண்ணன். விவரமில்லாம அவர் எதிலும் தலையிடுகிறவர் இல்லை. அதான் யோசிக்கிறேன்."

"அவங்க சொல்றதுல ஏதாவது ஆதாரம், சாட்சி இருக்கணுமே?"

"பெரிசா ஒண்ணுமில்லை சார். ஆனால் இதைப் பாருங்களேன்" என்று தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்த அந்த டாலரை எடுத்துக் கொடுத்தார் கனகசபை.

அதை வாங்கி உற்றுப் பாத்தார் அதிகாரி. அவர் முகத்தில் மகிழ்ச்சியின் வெளிச்சம் தெரிந்தது.

வீடு திரும்பிக் கொண்டிருந்த நான்கு பேரையும் வழியில் கண்ட அந்தக் காட்சி திடுக்கிட வைத்தது. சாலை ஓரத்தில் ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த ஒருவர் தலையில் அவரது மனைவி ஒரு பானை தண்ணீரை அப்படியே கவிழ்த்துக் கொண்டிருந்தாள்.

அதோடு வசவு வேறு. "அடப்பாவி மனுஷா உனக்கு எங்க இருந்துதான் சாராயம் கிடைக்குதோ? வீட்டில் காசை எங்கே மறைத்து வைத்தாலும் திருடிக்கிட்டுப் போய் இப்படி குடிச்சிட்டு வந்து நிக்கறியே. ஊர்ல கள்ளுக்கடை, சாராயக் கடை கூடாதுன்னு கட்டுப்பாடு போட்ட பின்பும் எந்தப் படுபாவியோ திருட்டுத்தனமாகக் காச்சி விற்கிறான். அதைக் கண்டுபிடிச்சி குடிச்சிட்டு வர்றியே. நீ எல்லாம் உருப்புடுவியா?" என்று கத்தியவாறு அழுது புலம்பிக் கொண்டிருந்தாள் அவள்.

"யாரு உன் காசை எடுத்தா? போய் பாரு. நீ வச்ச இடத்திலேயே கிடக்கும். என்கிட்டேயே நிறைய பணம் இருக்கு. நீ வேணா கேளு தரேன்" என்று கூறியவாறு அவன் தனது பையில் இருந்து சில்லறை, நோட்டுகளை வெளியே எடுத்துப் போட்டான்.

அவை நனைந்திருந்தன.

செந்தில் கேட்டான் : "நம்ம ஊர்ல சாராயமா? அதுவும் கள்ளச் சாராயம் கிடைக்குதா?"

"அதான் எனக்கும் புரியல. ஊர் கட்டுப்பாட்டை மீறி சாராயம் காய்ச்ச துணிச்சல் உள்ளவன் எவன்னு தெரியலையே!" என்றான் கிட்டான்.

"எங்கோ இடிக்குதே" என்றான் உதாரணம். "எங்க எதிர் வீட்டுக்கருப்பன் நல்ல குடிமகன். அவனுக்குத் தண்ணி போடலைன்னா தூக்கமே வராது. ஊர்ல கட்டுப்பாடு இருக்கறதால பக்கத்து ஊருக்குப் போய் குடிச்சிட்டு வருவாரு. வந்த பிறகும் ஒரே புலம்பல். என்ன சனியன் எவ்வளவு குடிச்சாலும் இவ்வளவு தூரம் நடந்து ஊரு திரும்பிறதுக்குள்ள தெளிஞ்சு போவுது. பாவிக உள்ளூரில் ஒரே ஒரு கடையாவது அனுமதித்தால் என்ன என்பது அவரது எண்ணம். அப்படி இருக்கும்போது அந்த ஆளுக்குத் தெரியாத கள்ளச் சாராய விஷயம் இந்த ஆளுக்குத் தெரிந்தது எப்படி? அதுதான்

யோசிக்கிறேன், எங்கேயோ இடிக்குது.'' என்றான் உதாரணம்.

''உதாரணம் நீ ரொம்பத்தான் சிந்திக்கிறடா'' என்றான் செந்தில்.

''ஏன் பண்ணையார் தன்னோட ஆட்களை உற்சாகப்படுத்தி வேலை வாங்க சாராயம் காய்ச்ச ஏற்பாடு பண்ணி தந்திருக்கக் கூடாது. அவருக்குத்தான் நிறைய மறைவான விஷயங்கள் இருக்கே'' என்றான் உதாரணம்.



''பாயிண்ட்டைப் பிடிச்சிட்டே'' என்றான் கிட்டான்.

''எல்லாம் சரி. அடுத்து நாம என்ன பண்ணணும்?'' என்றான் செயல் வீரனைப் போல் செந்தில்.

''நாளையிலிருந்து இந்த ஆள் பின்னே சுத்த வேண்டியதுதான். அவன் எங்கே போறான். என்ன பண்றான் என்று மோப்பம் பிடிச்சபடி பின்னாடி போனா சாராயம் காய்ச்சற ஆட்களைக் கண்டுபிடித்து விடலாம்'' என்றான் கிட்டான்.

''அதுதான் சரியான வழி'' என்று எல்லோரும் அவன் சொல்வதை ஆமோதித்தனர்.

''சரி, இன்று அதிகம் அலைந்தாகி விட்டது. எல்லோரும் வீடு போய்ச் சேருவோம். நாளையில் இருந்து அந்த ஆளைப் பின் தொடரலாம்'' என்றான் கிட்டான்.

சிட்டழகுவை வைத்து பூட்டப்பட்டிருந்த அறை சட்டென திறக்கப்பட்டது. பசி மயக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்த சிட்டழகு பதறித் துடித்து எழுந்து உட்கார்ந்தாள். அவளுக்குப் பக்கத்தில் டிபன் பொட்டலம் பிரிக்கப்படாமல் கிடந்தது.

உள்ளே வந்தவன் பார்வையாலேயே அவளை எரித்து விடுபவன் போல பார்த்தான். ''ஏய், உனக்கு ஒழுங்கா சொன்னா புரியாது. சின்னப் புள்ளையை அடிக்க கூடாதுன்னு பார்த்தா, ரொம்பத்தான் எரிச்சலைக் கிளப்பறியே. நீ



மத்தாப்பூ

தீபாவளி போன்ற பண்டிகை நாட்களில் கலர் கலராய் மத்தாப்பூ கொளுத்தி மகிழ்வோம். அதில் பச்சை, சிவப்பு நிறங்களும் அடங்கும். பேரியம் உப்பைச் சேர்த்தால் பச்சை நிறச் சுடர் வரும். ஸ்ட்ரான்சியம் என்னும் உப்பைச் சேர்த்தால் இளஞ்சிவப்பு நிறச் சுடர் வரும்!

- தேனி முருகேசன்

பட்டினி கிடந்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினா விடுதலை பண்ண இது என்ன கவர்மெண்ட் ஜெயிலா?''

சிட்டழகு நடுநடுங்கிப் போனாள். ''இப்போ சாப்புடுறியா, இல்லையா?'' என்று மீண்டும் ஒரு அதட்டல் போட்டான்.

''சரி சாப்பிடுறேன்'' என்று மெல்லிய குரலில் சொன்னாள் அவள்.

''எடு பொட்டலத்தை'' என்றான்.

அவள் நடுங்கியபடியே பொட்டலத்தை எடுக்க, அதனை நகர்த்தினாள்.

அதன் அடியில் இருந்து 'விர்ரென' ஒரு கரப்பான்பூச்சி பறந்தது. அவள்மீது விழப் பார்த்தது.

அவள் என்னமோ ஏதோ என்று 'வீல்'லென அலறியபடி எழுந்து ஓடினாள்.

''கரப்பான் பூச்சிக்கு இந்தப் பயம் பயப்படுறே?'' என்றபடி சுவரில் ஏறி ஓடிய கரப்பானை உள்ளங்கையால் ஒரு அடி வைத்தான். அது சுவரோடு நசுங்கிச் செத்தது.

அதற்குள் வெளியில் நின்ற ஒருவன் உள்ளே நுழைந்தான். ''ஏய், என்னடா பண்ற அவளை. மிரட்டாதே ஏற்கனவே உனக்குச் சொல்லி இருக்கேனுல்ல'' என்றான்.

''நான் ஒண்ணும் பண்ணலைங்க, சும்மா கரப்பான்பூச்சி பார்த்து பயந்து போய் கத்துறா'' என்றான்.

அங்க கிடந்த டிபன் பொட்டலத்தை அவனும் பார்த்து விட்டு ''நீ இன்னும் சாப்புடலையா?'' என்றான் பரிவாக.

அவள் 'இல்லை' என்று தலையை அசைத்தாள்.

''ஏன்?'' என்றான் அவன்.

''அது வேண்டாம். அதிலிருந்துதான் கரப்பான்பூச்சி பறந்து போனது. விஷம்'' என்று திக்கித்திக்கிச் சொன்னாள் சிட்டழகு.

''சரி, வேற தர சொல்றேன் சாப்புடுறியா?'' என்றான் அவன்.

'சரி' என்பது போல தலையாட்டினாள் அவள்.

''டேய் இதை எடுத்துட்டுப் போ. வேற பொட்டலம் கொண்டா'' என்று பக்கத்தில் நின்றவனிடம் உத்தரவு போட்டான் அவன்.

''சரிங்க அண்ணே'' என்றபடி வெளியேறினான் முதலாமவன்.

''இந்தா பார் பொண்ணு. இங்கே சில வேலைகள் நல்லபடியே நடக்க வேண்டியிருக்கு. தப்பான சமயத்தில் வந்து நீ மாட்டிக்கிட்ட. அதனால உன்னைச் சட்டுன்னு விட முடியாதுன்னு பெரியவர் நினைக்கிறார். நீ கொஞ்சம் பொறுமையாக இருந்தீன்னா அய்யனார் கோயில்ல பெரிய பூசை முடிந்த கையோடு உன்னை விடுவிச்சுடுவாங்க. அதுவரைக்கும் கொடுத்ததைச் சாப்பிட்டுவிட்டு நிம்மதியா தூங்கு.'' என்றான்.

''உங்க அம்மா, அப்பாவைப் பத்தி எல்லாம் கவலைப்படாதே! அதெல்லாம் பெரியவரு பார்த்து சமாதானம் சொல்லி சமாளிச்சுக்குவாரு புரிஞ்சுதா? நீ ஒழுங்கா சாப்புடணும். தெம்பா இருக்கணும். அப்பத்தான் விடுவிக்கும்போது வீடு போக சவுரியப்படும். பட்டினி கிடந்து நோயாளி ஆயிட்டின்னா எல்லோருக்கும் சிரமம்.''

அவனைப் பார்க்கும்போது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'இத்தனை முரடனாகத் தெரியும் இவன் இத்தனை இதமாக எப்படி பேச முடிகிறது. இவன் சொல்வதெல்லாம் உண்மைதானா? இல்லை என்னை ஏமாற்ற நடிக்கிறானா? இவன் சொல்வது போல் அய்யனார் கோயில் பெரிய பூசைக்கு அப்புறம் விட்டுடுவாங்களா? அது எப்போ நடக்கும்?' என்று யோசித்தாள்.

'சரி, பெரிய பூஜை எப்போதென அவனிடமே கேட்டு விடலாம்' என்று நினைத்தாள். அவனை எப்படி அழைப்பது என்று

அவளுக்குத் தெரியவில்லை.

அண்ணே, சார், அய்யா என்றெல்லாம் யோசித்து விட்டுக் கடைசியாய் ''என்னங்க'' என்று அழைத்தாள்.

அவன் 'என்ன?' என்பது போல் தலையை அசைத்தான்.

''பெரிய பூசை...'' சிட்டழகு கேட்கும் முன் வந்து விட்டான் டிபன் எடுக்கப் போனவன்.

உள்ளே இருந்தவனும் 'சும்மா இரு' என்பதுபோல் அவளுக்குச் 'சைகை' காட்டினான்.

வந்தவன் ஏதோ அவசரமாக ஓடி வந்தவன் மாதிரி மூச்சிரைக்க வந்து நின்றான்.

''என்னடா இப்படி இறைக்குது. ஓடி வந்தியா. மெதுவாக வர்றது தானே! இங்கே என்ன கொள்ளை போகுது?''

ஆசுவாசப்படுத்திக் கொண்டான். ''அதில்லண்ணே, பெரியவரு கொஞ்ச நேரத்தில் இங்க வரப் போறாருன்னு தகவல் வந்திருக்கு. அதான் அலர்ட்டா இருக்கணுமேன்னு வேகமாக சொல்ல வந்தேன்.''

''பெரியவர் வந்து கேட்டால் நாங்க உன்னை நல்லா நடத்துறோம்னு சொல்லணும். தெரிஞ்சுதா? எதையாவது பேசி எங்களை வம்பில் மாட்டிவிட்டுறாத? நாங்க போய் புது ஆட்கள் வந்தால் உன்னை எங்க அளவுக்குக்கூட நடத்த மாட்டாங்க. ஆமா சொல்லிட்டேன்'' என்று கூறியவாறு வெளியேறினான். கதவை இழுத்துச் சாத்தினான்.

சிட்டழகு முகத்தைத் துடைத்துக் கொண்டு கையைக் கழுவினாள். டிபனைப் பிரித்துச் சாப்பிடத் தொடங்கினாள்.

சுவரில் அறைந்து கொல்லப்பட்ட அந்தக் கரப்பான்பூச்சியின் தலை மட்டும் சரியாக நசுங்காததால் அது அவளையே பார்ப்பது மாதிரி இருந்தது.

வெளியே ஒரு லாரி வந்து நின்றது. அதன் எல்லா பக்கங்களும் நன்றாக மூடப்பட்டிருந்தன. பின்னாலே ஒரு காரும் வந்தது. அதிலிருந்து இறங்கினார் பண்ணையார்.

நிலவறைக்குக் காவல் இருந்தவர்கள் மேலேறி ஓடும் சத்தம் தடதடவென கேட்டது.

சிட்டழகு காதைக் கூர்மையாக்கினாள். சிறிது நேரம் அமைதி நிலவியது.

பிறகு மேல் ஏறிப்போனவர்கள், திரும்பவும் படி இறங்கும் சத்தம். முன்பைவிட அதிகமான ஓசை. போனவர்களுடன் மேலும் சிலர் கூடுதலாக இறங்கி வருகின்றனர் போலும் என்று நினைத்தாள்.

அவர்களில் பண்ணையாரும் இருப்பாரோ என அவள் நினைத்த கணத்தில் கதவு திறக்கப்பட்டது. கதவைத் திறந்து கொண்டு வந்தவன் ஒரு கறுப்புத் துணியால் அவள் கண்களைக் கட்டினான். அவள் திடுக்கிட்டாள்.

(தொடரும்)

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 ப	ட்	2 ச	ண	ம்	■	து	த்	3 மு
ட்	■	த்	■	ச	■	ந்	■	ற்
டா	■	த	■	ல	■	ரு	■	ற
4 சு	5 ப	ம்	■	6 சு	ரு	7 வி	■	ம்
■	ணை	■	■	■	■	■	8 ஏ	■
ர்	■	9 தி	த்	10 அ	■	11 க	ணி	னி
னீ	■	ரா	■	ப்	■	ரு	■	மி
ன்	■	ட்	■	ப	■	ட	■	ன்
12 ப	ச்	சை	■	ர்	ம	ன்	யா	13 மி



ஒரு வாண்டுப்பையன், அழுது கொண்டே வீட்டுக்குள் வந்தான். அம்மா கேட்டாள்: ஏன் அழுகிறாய்?

பையன்: அப்பா, வாசல் படியில் தடுக்கி விழுந்துவிட்டார்!

அம்மா: அப்பாவுக்கு ஒன்றும் ஆகாது. பயப்படாதே! இதற்கெல்லாம் அழுவார்களா என்ன?

பையன்: அப்பா தடுக்கி விழுந்து விட்டாரே என்று நான் அழவில்லை.

அம்மா: அப்புறம்?

பையன்: அவர் விழுந்தவுடன் நான் சிரித்துவிட்டேன். அதனால் கோபம் வந்து,

பிரச்னையைத் தீர்த்த கனவு!

இன்டர்நெட் பற்றி ஒரு சில சுவாரசியமான தகவல்களைப் பார்க்கலாமே!


• உலகிலேயே மிக அதிகமாக இன்டர்நெட்டைப் பயன்படுத்து கிறவர்கள் அமெரிக்காவில்தான் உள்ளனர். இது சுமார் இரண்டு கோடி பேர்கள் என்கிறது ஒரு புள்ளி விவரம். அடுத்த இடம் பிடிப்பது ஜப்பான். ஆனாலும் எண்ணிக்கை கணக்குப் பார்த்தால் வெறும் பதினெட்டு லட்சம்தான்.

• உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் இன்று இன்டர்நெட் பரவிக் கிடக்கிறது.1997வரை நியூகினியா இன்டர்நெட் வசதி இல்லாத பகுதி என்று இருந்தது. இப்போது அங்கும் நெட் வசதி உண்டு. இன்று உலகில் இன்டர்நெட் வசதி இல்லாத பகுதி எது என்று சல்லடை போட்டுத் தேட வேண்டும். அப்படி தேடிய போது கிடைத்த விடை: பாக்லாந்து தீவு

நம் ஜனாதிபதி அப்துல் கலாமின் மீது பெரும் மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கும் சில நபர்கள் சேர்ந்து www.abdulkalam.com என்று ஓர் இணைய தளத்தை நடத்தி வருகிறார்கள். இதில் அவரது வாழ்க்கைக் குறிப்பு மட்டுமில்லாமல், அன்றாடம் அவரது செயல்பாடுகள், அவர் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. அது மட்டுமில்லை. அவரைக் கவர்ந்த மனிதர்கள், அவருக்கு உலகெங்குமிருக்கும் சாமானியர்கள் எழுதும் கடிதங்கள், அவர் பல்வேறு தருணங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளின் விவரங்கள், அவர் மீது தாக்கம் ஏற்படுத்தியவர்கள், இவையும் இருக்கின்றன. அவருக்கு நீங்கள் ஏதாவது சொல்ல விரும்பினால், தெரிவிக்கவும் அங்கே இடமுண்டு. சான்ஸ் கிடைத்தால் ஆங்கிலத்திலும், தமிழிலும் இடம் பெற்றுள்ள இந்த இணைய தளத்துக்கு ஒரு விசிட் அடியுங்களேன்!

ஒருவர், தன் நண்பரின் வீட்டுக்கு விடுமுறைக்காகப் போகத் திட்டமிட்டு, டெலிபோனில் தகவல் சொன்னார். முகவரியைக் கேட்டுக் கொண்டபின், ''வீட்டைச் சுலபமாகக் கண்டுபிடிக்க என்ன வழி?'' என்று கேட்டபோது, நண்பர் சொன்னார்: ''பீச்சிலிருந்து கல்லெறி தூரம்தான் என்வீடு! அங்கேயிருந்து பார்த்தாலே கல்லெறிந்து, ஜன்னல் உடைந்து போயிருப்பதை வைத்து, அடையாளம் கண்டுபிடித்து விடலாம்!''

அப்பா என்னை அடித்துவிட்டார். அதனால்தான் அழுகிறேன்.



இந்தப் படத்தில் துரத்திக் கொண்டு ஓடும் இரண்டு ராட்சதர்களையும் பாருங்கள். முன்னால் ஓடுபவர் சிறியவர் போலவும், பின்னால் துரத்திக் கொண்டு வருகிறவர் அவரைவிடப் பெரிய உருவம் கொண்டவர் போலவும் தோன்றுகிறது அல்லவா? ஸ்கேலை எடுத்து அளந்து பாருங்கள்! இரண்டு பேரும் ஒரே உயரம்தான்! என்ன உங்கள் கண்களே உங்களை ஏமாற்றுகிறதா?

கனவில்கூட பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்பதற்கு இது உதாரணம்.

ஐஸக் சிங்கர் என்பவர், தையல் மிஷினைக் கண்டுபிடித்தவர். அவர், தையல் மிஷினை வடிவமைத்தபோது, ஒரு பிரச்னை ஏற்பட்டது. ஊசியின் ஒருமுனை கூர்மையாகவும், இன்னொரு முனையில் நூல் நுழைய வசதியாய் துளையும் இருந்ததால், அதைத் தையல் மிஷினில் பொருத்தி நூலும் அறுபடாமல், சுலபமாகவும் தைப்பதற்கு வசதியாக இல்லை.

இந்தப் பிரச்னைக்கு என்ன தீர்வு என்று யோசித்தபடியே தூங்கப் போனார் சிங்கர்.

தூக்கத்தில் அவருக்கு ஒரு கனவு வந்தது. கனவில், அவரை சில ஆதிவாசிகள் துரத்திக்கொண்டு வந்தார்கள். இவர் பயந்து ஓடிக்கொண்டே இருந்தார். ஆதிவாசிகள், கையில் ஈட்டியுடன் அவரை மிகவும் கிட்டே நெருங்கி விட்டார்கள். அப்போது, அந்த ஈட்டியை உற்று நோக்கினார் ஐஸக் சிங்கர். அதன் கூரிய முனையில், ஒரு துளையைக் கண்டார். அவருக்குப் பொறி தட்டியது.


மறுநாள் காலை, கூர்மையான பகுதியிலேயே துளையும் கொண்டாற் போல ஓர் ஊசியை உருவாக்கி, மெஷினில் பொருத்திப் பார்த்தார். சுலபமாக, தொடர்ச்சியாக, நூல் அறுபடாமல் தைக்க முடிந்தது.


தொகுப்பு:
கௌதம் ராம்

ஒரு டாக்டர், தன் காரை, ஒரு மெக்கானிக்கிடம் ரிப்பேருக்குக் கொடுத்தார். வேலை முடிந்தவுடன், பில் கொடுத்தார் மெக்கானிக்.

"அடேயப்பா! இவ்வளவு ரூபாய் பில் கொடுத்திருக்கிறீர்களே!" என்றார் டாக்டர்.

அதற்கு மெக்கானிக் சொன்னார்: "ஆதாம், ஏவாள் காலத்திலிருந்து ஒரே மாதிரியான உடம்புகளுக்குத்தானே நீங்கள் சிகிச்சை அளித்துக்கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் எங்கள் கதை அப்படியில்லையே! எத்தனை புதுப்புது மாடல்கள் வந்துகொண்டே இருக்கின்றன. எவ்வளவு புது விஷயங்கள் தெரிந்து கொண்டு, நாங்கள் வேலை பார்க்க வேண்டியிருக்கிறது? அதனால்தான் பில் அதிகம்!"





கர்ணனின் வலிமை!
வேணுவாரியத் சந்திரன் சூலிச்சேரி
பாண்டவர்கள் வனவாசத்திற்குச் சென்றிருந்தனர். அப்போது பீமன் உணவு தேடிக் கிளம்பினார்.
இது என்ன அதிசய மரம்! ஒரே ஒரு பழம் மட்டும் இருக்கிறது.
உடனே பழத்தைப் பறித்துக் கொண்டு கிளம்பினார்.
அப்பொழுது பாண்டவர்களைப் பார்க்க கிருஷ்ணர் வந்தார்.
பீமா, என்ன காரியம் செய்திருக்கிறாய்?
ஏன், என்ன தவறு செய்துவிட்டேன்?



துர்வாச முனிவர் இந்தக் காட்டில் தவம் செய்து கொண் டிருக்கிறார். வருடத்திற்கு ஒருமுறை மட்டும்தான் உணவு உண்பார்.
நீ பறித்த அந்தப் பழம் அவர் சாப்பிட வேண்டியது.
ஐயோ! கிருஷ்ணா, இது எனக்குத் தெரியாது. அவர் வந்தால் என்ன செய்வது?
எனக்கும் பயமாகத்தான் இருக் கிறது. ஏதாவது செய்தாக வேண்டும்.
கிருஷ்ணா, நீதான் ஒரு வழி சொல்ல வேண்டும்.
சரி, வாருங்கள், போகலாம்.
மரத்தை அடைந்தனர்.
இந்தப் பழம் மீண்டும் மரத்தில் தொங்க வேண்டும். இது ஒன்றுதான் தப்பிக்க வழி.
ஆனால் எப்படி?


நம் ஒவ்வொருவரின் சக்தியையும் பயன்படுத்தி இந்தப் பழத்தைத் தொங்க விட முயற்சிக் கலாம்.
குந்திதேவி மந்திரங்களை உச்சரித்து. வேண்டினார். ஆனால் -
உங்களால் பாதி தூரத்துக்குத் தான் பழத்தைக் கொண்டு செல்ல முடிந்தது.
பிறகு பாண்டவர்களும், பாஞ்சாலியும் முயற்சி செய்தனர்.
நாங்கள் தோற்றுப் போய் விட்டோம் கிருஷ்ணா.
இதைக் கர்ணன் ஒருவனால் மட்டும்தான் செய்ய முடியும்.
கர்ணனா! அவன் எங்கள் எதிரி.
எங்களால் முடியாததை, கர்ணனால் எப்படி செய்ய முடியும்?
கர்ணன் எதிரியாக இருக்கலாம். ஆனால் அவனால்தான் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியும்.



பாண்டவர்கள் இறுதியில் கிருஷ்ணரின் அறிவுரையை ஏற்றனர். கர்ணன் அழைத்து வரப்பட்டார்.
தங்கள் அழைப்பிற்கு மகிழ்ச்சி. நான் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்.
அனைத்தையும் கேட்ட கர்ணன் பிரார்த்தனை செய்தார்.
கடவுளே, என் தவ வலிமை உண்மை என்றால் இந்தப் பழம் மரத்தில் தொங் கட்டும்.
அடுத்த நொடி பழம் மரத்தில் ஒட்டிக் கொண்டது.
என்ன..?
கர்ணா, பாண்ட வர்களை உன் தவ வலிமையால் காப்பாற்றி விட்டாய்.
நாம் மறுபடியும் சந்திப்போம் கிருஷ்ணா.
SRI FEATURES. ALUVA-1
அர்ஜுனா, கர்ணனின் வலிமை யைப் புரிந்து கொண்டாயா?
ஆமாம். நீங்கள் என் கண் களைத் திறந்து விட் டீர்கள்.

சுற்றுலா அனுபவம்

அழகான ராஜா மலை!

ஒவ்வொரு ஆண்டும் எங்கள் பள்ளியில் சுற்றுலா செல்வோம். இந்த ஆண்டும் சுற்றுலா செல்ல ஆசிரியர்களை வற்புறுத்தினோம்.

"இந்த ஆண்டு செஞ்சிக்குச் செல்லலாம்" என்று ஆசிரியர் கூறியதும் பலருக்கு முகம் சிறுத்தது. எல்லோரையும் சம்மதிக்க வைத்தோம்.

செஞ்சியைப் பற்றி ஒவ்வொருவருக்கும் ஒரு கற்பனை. அந்தப் பொன்னாளும் வந்தது. ஆகஸ்ட் பன்னிரண்டாம் தேதி காலை ஆறு மணிக்குப் புறப்பட்டோம். ஒன்பது மணிக்குச் செஞ்சியை அடைந்தோம். மலை அடிவாரத்தில் சிற்றுண்டியைப் பகிர்ந்து உண்டோம்.

9.40 மணிக்கு மலை ஏற ஆரம்பித்தோம். ஏற... ஏற... மலையின் அழகு எங்களை மிகவும் வசீகரித்தது. முகம் சுளித்தவர்களும் மெய்மறந்தனர்.

நாங்கள் ஏறியது ராஜா மலை. 1540-1550க்கும் இடையே விஜயநகர மன்னர் முத்தியாலு நாயக்கரால் இம்மலையில் கோட்டை எழுப்பப்பட்டுள்ளது. இந்த மலை கிருஷ்ணகிரி என்றும் அழைக்கப்படுகிறது.

கோட்டைக்குள் நுழைந்ததும் நம் கண்ணில் புலப்படுவது கல்யாண மகால். அதையடுத்து அரசரின் உடற்பயிற்சி செய்யும் கூடம், பிறகு தானியக்கிடங்கும் உள்ளது. மேலும் உள்ளே சென்றால் கன்னியம்மன் ஆலயம் இருக்கிறது.

தண்ணீர், தொப்பி, காமிராவுடன் ராஜா மலையில் ஏறத் துவங்கினோம். வழியில் ஆங்காங்கே ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக மண்டபங்கள் கட்டப்பட்டிருந்தன. காற்று அற்புதமாக வீசியது. தொப்பிகளையும், துப்பட்டாக்களையும் பாதுகாக்கச் சிரமப்பட்டோம்.

மலை உச்சியை அடைந்தபோது மணி பத்து முப்பது. மேலிருந்து கீழே பார்த்தால் ஒரே பரவசமாக இருந்தது. நாங்கள் வந்த பேருந்துகள் சிறு பொம்மைகளாகிவிட்டன. மனிதர்கள் எறும்புகளைப் போல் தெரிந்தனர். எங்களது காமிராக்கள் அனைத்து காட்சிகளையும் அவசரமாக விழுங்கி, ரோலில் பதித்துக் கொண்டன.

மலை உச்சியில் சிறு மண்டபம் இருந்தது. மண்டபத்தின் உச்சிக்கு ஏணிகளின் உதவியுடன் மேலே சென்றோம். 'இந்தப் பிரமாண்டமான பூமியை யாரோ மந்திரத்தால் சிறிதாக்கி விட்டது' போல் தோன்றியது.

11.45க்குக் கீழே இறங்கினோம். 12.20க்கு அடிவாரத்தை அடைந்தோம். வழியில் ஒரு சுனை. மேலே ஏறிய போதே எங்கள் தண்ணீர் பாட்டில்களில் தண்ணீர் காணாமல் போய்விட்டது. சுனையைக் கண்டதும் எங்களுக்குத் தேவாமிர்தத்தைப் பார்த்தது போல் ஆனந்தமாக இருந்தது. இயற்கை ஃபிரிட்ஜின் குளிர்ந்த நீரைப் பருகி தாகம் தீர்த்தோம்.

அங்கிருந்து கிளம்பி சாத்தனூர் அணையை அடைந்தோம். மதிய உணவை உண்ட பின் சுற்றிப் பார்த்தோம். அங்கிருந்து ஆறு மணிக்குக் கிளம்பி இரவு 11.30க்குப் பள்ளியை அடைந்தோம். ஒரு மணி நேரமாக எங்கள் பெற்றோர் காத்திருந்தனர். தூங்கச் சென்றபோது மணி 12.30.

களைப்பு மேலிட உடனே தூங்கினாலும் கனவில் செஞ்சிக் கோட்டை, ராஜா மலையின் அழகு நர்த்தனமாடியது.

- ந. பூஷாவணி, பதினோராம் வகுப்பு,
கிறிஸ்து ராஜா பெண்கள்
மேல்நிலைப் பள்ளி, கிழக்கு தாம்பரம்.

• ராஜா மலை உச்சியில் உள்ள கோயில்





கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், நகைச்சுவைக் கதை, புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....


....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :


சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

மின்னல், இடி, மழை!

ஆழி



மின்னல் என்பது, மின் ஊட்டம் பெற்ற காற்று மண்டலங்களின் குறுக்கு இணைப்பில் ஏற்படும் மின் அதிர்ச்சி. அதனால் மின்னலானது, மேகங்களில், மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும், கிடைமட்டமாகவும் பாயும்!




மின்னல் ஒரு விநாடிக்கு சுமார் 1600 கி.மீ. வேகத்தில் பாய்கிறது. அதைச் சுற்றியுள்ள காற்றை 33000°C அளவுக்குச் சூடாக்குகிறது. இக்காற்று விரிவடைந்து ஒன்றோடு ஒன்று பலத்த சத்தத்துடன் மோதிக் கொள்கிறது. இதுதான் இடி! ஒளியின் வேகம் விநாடிக்கு 2,97,600 கி.மீ. ஒலியின் வேகம் விநாடிக்கு 330 மீட்டர். ஒரே சமயத்தில் தோன்றினாலும், மின்னலுக்குப் பின் இடிச் சத்தம் கேட்பது அதனால்தான்!





அமெரிக்காவில், பெஞ்சமின் ஃபிராங்க்லின்தான், மின்னல் உண்டாவதற்குக் காரணம் மின்சாரம் என்று கண்டு பிடித்தார். அவர், இடியும் மின்னலுமாக இருந்த ஒரு சமயத்தில் ஒரு காற்றாடியை உயரத்தில் பறக்கவிட்டு, கையில் உள்ள நூலில் ஒரு சாவியையும் இணைத்தார். மின்னல் மின்னியதும் அவருக்குச் சிறிய மின்அதிர்ச்சி ஏற்பட்டதை உணர்ந்தார். இதே சோதனையை மற்றொருவர் செய்து பார்க்க முற்பட்டார்— ஆனால், பாவம்; மின்னல் தாக்கி அவர் இறந்துவிட்டார்!






துப்பாக்கிக் குண்டு பாய்வதைப்போல் 30,000 மடங்கு வேகத்தில் பாய்கிறது மின்னல்! மின்னல்களில் 85 சதவீதம் நிலத்தின் மீதுதான் வீழ்கின்றன. கடலில் வீழ்வது குறைவு.






மின்னலின் சராசரி நீளம் 5 கி.மீ! சராசரி அகலம் 15 செ.மீ. ஆனால், கொடி போல் மின்னிப் பாயும் மின்னல், சில சமயங்களில் பந்து போல் உருண்டு பாய்வதும் உண்டு!





மின்னலில் நைட்ரஜன் பெருமளவில் இருக்கிறது. மின்னல் இல்லாவிட்டால் தாவரங்களின் வளர்ச்சி மிகவும் பாதிக்கப்படும். நம்மைச் சூழ்ந்துள்ள காற்றில் 80 சதவீதம் நைட்ரஜன்தான். மின்னல் மூலம் ஆண்டுக்கு 100 மில்லியன் டன் ரசாயன உரம் பூமிக்குக் கிடைக்கிறது!



பொதுவாக, வெண்மையான மின்னல் களைத்தான் பார்க்கிறோம். ஆனால், தென் ஆப்பிரிக்காவில் சிவப்பு, மஞ்சள், ரோஜா நிற மின்னல்கள் தோன்றுகின்றன. தவிர, வானவில்லில் உள்ள 7 நிறங் களும் மின்னலில் தோன்றுவது உண்டு!

பூமியில் வினாடிக்கு சுமார் 100 மின்னல்கள் வீதம் மின்னிக் கொண்டிருக் கின்றன. ஜாவாவில் தான் மின்னலும் இடியும் அதிகம்!







மின்னல் ஒரே இடத்தைப் பல தடவை தாக்கக்கூடும். நியூயார்க்கில் உள்ள எம்பயர் ஸ்டேட் பில்டிங் உயரம் 387.50 மீட்டர்; 102 மாடிகள். அந்தக் கட்டடத்தை ஒரே ஆண்டில் மின்னல் 48 தடவைகள் தாக்கியது!

ஸ்விட்சர்லாந்தில் உள்ள ஒரு மலையை 100 தடவை மின்னல் தாக்கியது!

பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ள நாடுகளையே மின்னல் அதிகமாகத் தாக்குகிறது!



இடிதாங்கி என்னும் 'மின்னல் கடத்தி'களை உயரமான கட்டடங்களில் பொருத்திவிட்டால், அதன் வழியாக மின்னலின் மின்சக்தி பூமிக்குப் போய்விடும். கட்டடங்களைப் பாதிக்காது. இதைக் கண்டுபிடித்தவரும் பெஞ்சமின் ஃபிராங்க்லின் தான். இடிதாங்கி என்பது, கட்டடத்தின் உச்சியிலிருந்து பூமியைத் தொடும் ஒரு நீண்ட கம்பி!



விமானம், மேகங்களுக்கு மேலே பறப்பதால், மின்னல், இடி, மழையின்போது அதற்கு எந்தவித பாதிப்பும் இருக்காது! விமானத்தில் இருந்து பார்த்தால், வானத்தில் 'வாணவேடிக்கை' நடப்பது போல் இருக்கும்!




மரங்களில் 'ஓக்' மரத்தின்மேல்தான் அடிக்கடி மின்னல் தாக்குகிறது என்று கண்டறிந்திருக்கிறார்கள். மின்னல்தாக்கி மரங்கள் அழியாமல் இருக்க, சிங்கப்பூரில் முக்கிய இடங்களில் உள்ள மரங்களில் இடிதாங்கிகளை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்!



சூரிய வெப்பத்தினால், பூமியில், நீர்நிலைகளில், கடலில், உள்ள நீர் ஆவியாகி, காற்று மண்டலத்தினுள் செல்கிறது. அதனால் மேகம் உருவாகிறது. 8 கி.மீ. முதல், 18 கி.மீ. உயரம் வரை மேகங்கள் காணப்படுகின்றன.



நிலத்தில் இருந்து கிளம்பும் நீராவி, மேகம் ஆகாமல் குளிர்ந்து நிலத்துக்கே வருவதால் பனி உண்டாகிறது.





மழைக்கும் மரங்களுக்கும் தொடர்பு உண்டு. அடர்த்தியான, மரங்கள் நிறைந்த பகுதியில் வெப்பம் குறைந்து ஈரம் அதிகம் இருக்கும். அதனால், வானமண்டலத்தில், காற்றோட்டத்தைப் பாதித்து, ஆவியாகிவிட்ட நீர் மறுபடி நீர்த்துளியாகி மழைபெய்ய உதவுகிறது.



வெண்மையான மேகம் குளிர்ந்து நீர்த் திவலைகளைச் சுமக்கும் போது அது கறுப்புச் சாம்பல் நிறத்தை அடைகிறது. ஒரு கன கிலோமீட்டர் பருமன் உள்ள மேகத்தில் சுமார் 2000 டன் நீர் உள்ளது. வானில் இருந்து பெய்யும் மழைநீர் மணிக்குச் சுமார் 11 கி.மீ. வேகத்தில் விழுகிறது.

மழை நீரில் B 12 வைட்டமின் இருக்கிறது. மழைநீர் வானத்திலிருந்து விழும்போது மிகவும் சுத்தமானது; தரையில் விழுந்ததும்தான் அசுத்தம் அடைகிறது.





மழை பெய்யும் அளவை அங்குலக் கணக்கிலும் செ.மீ. கணக்கிலும் சொல்கிறார்கள். சமப்பரப்பில் மழை பெய்யும்போது, அடிப்பக்கம் சமமாக உள்ள ஒரு பாத்திரத்தில் நிரம்பும் மழை நீரின் உயரமே அளவு! பாத்திரத்தில் 5 செ.மீ. உயரம் மழைநீர் இருந்தால், அந்தப் பகுதி முழுவதும் 5 செ.மீ. மழை பெய்தது. என்பது பொருள்.

மேகங்களை 6 வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள்.



சுருள் மேகம்




குவியல் படல மேகம்



அடுக்குக் குவியல்மேகம்



உயர்குவியல் மேகம்



அடுக்கு மேகம்



குவியல் மழை மேகம்

நன்றி கெட்ட



மனிதர்கள்!

"சம்பந்தி வருகிறப்போ கோழியைக் குருமா பண்ணிட வேண்டியதுதான்" எஜமானனின் வார்த்தைகளைக் கேட்ட கோழி திடுக்கிட்டது. வீட்டிலுள்ளவர்கள் அசந்த சமயம் வெளியே நழுவியது.

எதிரில் வந்த நாய் "சகோதரி! ஏன் இப்படி பயந்து, பம்மி வருகிறாய்?" என்று விசாரித்தது.

"நாயக்கா! நீ சொன்னது ரொம்ப சரி. இந்த மனிதர்களுக்கு நன்றியே கிடையாது. எத்தனை முட்டை போட்டிருக்கிறேன்! என் குஞ்சுகள் வளர்ந்து அவற்றை நல்ல விலைக்கு விற்றிருக்கிறான். இன்று என்னையே உணவாக்குவதாகத் திட்டம் போட்டிருக்கிறான். நீ சொன்னபடி தப்பி வந்துவிட்டேன்" என்றது கோழி.

"'நாய் மாதிரி வீட்டைக் காத்துக் கிடந்தேன்' என்று உபமானம் சொல்கிற மனிதர்கள் இவ்வளவு நாள் உழைத்தேனே என்று யோசிக்காமல் சொறி பிடித்துவிட்டதென்று துரத்தி விட்டார்களே என்னை" என்றது நாய். இனிமேல் நமக்குப் பொறுப்பில்லை! காட்டில் வழிப்போக்கர்கள் சாப்பிடும் கட்டுச் சோற்று மீதியிலேயே நாம் காலம் தள்ளுவோம்" என்று காட்டுவழி நடந்தன.

எதிரே வந்த கழுதையையும், குதிரையையும் பார்த்து நாய் "எங்கே ஜோடியாகப் புறப்பட்டீர்கள்?" என்று கேட்டது.

"அண்ணன், தம்பி இரண்டு பேர். அண்ணன் வண்டியோட்டிப் பிழைத்தான். தம்பி துணி வெளுத்து வாழ்க்கை நடத்தினான். நேற்று ஒரு சவாரியில் கால் சுளுக்கிக் கீழே விழுந்துவிட்டான் இந்தக் குதிரையண்ணா. அடித்து நொறுக்கி விட்டானாம் இவன் முதலாளி. அதனால் மனம் வெறுத்து வீட்டை விட்டு வந்துவிட்டான் இவன். என் நிலையும் அதேதான்! வெளுத்த துணியோடு கீழே விழுந்து காலில் அடிபட்டிருக்கிறது. பார்த்தாயா? மனிதர்கள் தப்பே பண்ணுகிறதில்லையா? ஒருநாள் தவறு நடந்ததற்கு இப்படியா தண்டிப்பது! திண்டாடட்டும் என்று வந்துவிட்டேன்" என்று கூறி பெருமூச்செறிந்தது கழுதை.

நான்குமாகக் காட்டுக்கு வந்தன.


மனிதர்கள் புற்களைத் தினமும் அரிந்துவிடுவதால் கழுதைக்கும், குதிரைக்கும் புற்களே அகப்படவில்லை. கால் வயிறு கூட தினமும் நிரம்பவில்லை. கட்டுச்சோறு கட்டிக் கொண்டு எந்த வழி போக்கரும் வராததால் நாயும், கோழியும்கூட பட்டினி கிடந்தன.

'பட்டினியால் இறப்பதைவிட ஒருவருக்கு உணவாகியிருக்கலாம். சாகும் வரை திருப்தியாக சாப்பாடு கிடைத்திருக்கும்' என்று நினைத்தது கோழி.

'நான் பொறுப்போடு வண்டி இழுத்திருந்தால் எஜமான் அடித்திருப்பாரா? பாவம்! வண்டி குடை சாய்ந்து வண்டியில் வந்தவர்களுக்கும், முதலாளிக்கும்கூட பலத்த அடிதான்! அந்தக் கோபத்தை பிள்ளை மாதிரி வளர்த்த என் மீது காட்டி விட்டார். எஜமானரை வண்டியில் சவாரி செய்தவர் எத்தனை திட்டினார்? வேளாவேளைக்குக் கொள்ளும், புல்லும் வேக வைத்த கடலையுமாகச் சாப்பிட்ட வயிறு இப்படி காய்கிறதே! இவர்களுக்குத் தெரியாமல் ஊருக்குத் திரும்பி விட வேண்டும்' என்று நினைத்தது குதிரை.

'நான் என்ன வேலை செய்து கிழிக்கிறேன்? பிஸ்கட்டும், சோறும் போட்டுக் காப்பாற்றும் எஜமானர் வீட்டைத் தூங்காமல் காவல் காப்பது என் கடமையல்லவா? உடம்பு சொறிக்குக் கூட மிருக வைத்தியரிடம் காட்டி ஊசி போட்டாரே! திமிரெடுத்துப் போய் ஓடி

மாலதி



உலகிலுள்ள உயிரினங்களிலேயே மிகப் பெரிய இதயம் கொண்ட உயிரினம் ஒட்டகச்சிவிங்கிதான். இதன் இதயமானது இரண்டடி நீளமும், சுவர்கள் மூன்றங்குல கனமும் கொண்டவை. இதயம் பெரிதாக இருப்பதால்தான் சிவிங்கியால் தன் நீண்ட கழுத்துக்கு இரத்தத்தைச் சீராகச் செலுத்த முடிகிறது.

- நெ. இராமன்

வந்ததுமில்லாமல் பொய் சொல்லி கோழியின் புத்தியையும் கெடுத்தேனே! இதற்குள் எஜமானர் புதுநாய் வாங்கி இருப்பாரோ? ஏதாவது யுக்தி செய்து வீட்டிற்குத் திரும்பி விட வேண்டும்' என்று தீர்மானித்தது நாய்.

'வெளுத்த துணிகள் மண்ணில் விழுந்தால் யாருக்குத்தான் ஆத்திரம் வராது? ஒரே வேலையை இரண்டு தடவை செய்ய முடியுமா? ஊட்டம் கொடுத்தால் நல்லவர், உதை கொடுத்தால் கெட்டவரா? இனிமேல் வேலையிலே கவனமா இருக்கணும்' என்று முடிவு கட்டியது கழுதை.

நான்கும் கூடிப் பேசி ஊருக்குத் திரும்பின.

திரும்பும் வழியில் ஒரு பழைய வீட்டில் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. பசி உயிரை வாட்டியதால் சாப்பிட ஏதாவது கிடைத்தால் தேவலை என்று நினைத்தன. வாயிற்கதவு தாளிட்டிருந்தது.

குதிரை, "என் மீது கழுதையாரும், அவர் மீது நாயாரும் நிற்கட்டும்; நாயின் மீது கோழி ஏறி ஜன்னல் வழியாக உணவு கிடைக்குமா என்று ஆராய்ந்து, உணவு கிடைக்குமென்றால் குரல் கொடுக்கட்டும். கழுதை பின்னங்காலால் உதைத்தாலே, கதவு பிய்த்துக் கொள்ளும். தேவையில்லாமல் சக்தியை வீணாக்க வேண்டாமே!" என்றது.

கழுதை, "சாப்பாடு மட்டுமின்றி தானியங்களும் உள்ளதா என்று பார். அவசரப்படாதே" என்று எச்சரித்தது.

அதன்படியே ஏறிய கோழி வீட்டினுள் பார்த்தது. இரண்டு கள்வர்கள் கொள்ளையடித்த பணம் நகைகளைப் பிரித்துக் கொண்டிருந்தனர். ஒரு பலகாரக் கடையிலிருந்து வாங்கி வந்திருந்த வித விதமான பலகாரங்களைப் பார்த்ததும் கோழிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை! 'கொக்கரக்கோ' என்று பலமாகக் கூவியது. உடனே நாய் 'லொள், லொள்' என்று குரைக்க, கழுதை 'காள், காள்' என்று கத்த, குதிரை கனைத்தது.

நள்ளிரவில் நடுக்காட்டில் இப்படி விசித்திரமான சப்தங்கள் எழவும் திருடர்கள் மிரண்டு பின்புறச் சுவரேறிக் குதித்து 'தப்பித்தால் போதும்' என்று தலை தெறிக்க ஓடினர்.

நான்கு நண்பர்களும் உள்ளே நுழைந்து பலகாரங்களைத் தின்றன. தூங்குவதற்காகக் கள்வர்கள் விரித்து வைத்திருந்த புல் படுக்கையைக் கழுதையும், குதிரையும் காலி செய்தன.

அதேசமயம் இவற்றைத் தேடி வந்த இவற்றின் எஜமானர்கள் இவற்றின் குரல்களைக் கேட்டு விரைந்து வந்தனர்.

கோழிக்காரன் வீட்டிலேதான் திருடு போயிருந்தது. அவன் தனது சொத்துக்களைக் கண்டதும் ஆனந்தமடைந்தான். கோழியை அன்புடன் தடவிக்கொடுத்து "உன்னை நான் கொல்லவே மாட்டேன். என் நகைகளை மீட்டுத் தந்தாயே!" என்று பாசத்துடன் கூறினான். மற்ற மூன்று பிராணிகளின் எஜமானர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் சிறிது பணமும் கொடுத்தான். மூன்றும் பொறுப்பாக நடந்துகொண்டு தங்கள் எஜமானர்கள் லாபமும் நன்மையும் அடையும்படிச் செய்தன.

கந்தன் மிகவும் புத்திசாலி. எந்த ஒரு இக்கட்டான சூழ்நிலையையும் நிதானம் தவறாமல் சாதுர்யமாகச் சமாளிக்கும் திறமை கொண்டவன். அவன், ஒரு நாள் இரவு ஆட்டு மந்தைக்குக் காவல் இருந்தான்.

நள்ளிரவு நேரத்தில் திருடன் ஒருவன் ஆடுகளைத் திருடுவதற்காக மந்தையை நோக்கி வந்து கொண்டிருப்பதை கந்தன் பார்த்துவிட்டான். 'இனி என்ன செய்வது? நானோ ஒத்தை ஆள். திருடன், கம்பு, கத்தி போன்ற பயங்கர ஆயுதங்கள் வைத்திருப்பான். கண்ணுக்கெட்டிய தூரம்வரை வீடுகளே கிடையாது. சத்தம் போட்டால்கூட யாருக்கும் கேட்காது. எப்படி சமாளிப்பது?' என்று யோசித்தான் கந்தன்.

அவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது. 'நாம் ஒரு ஆள் அல்ல, நம்மைச் சுற்றிலும் காவலுக்குப் பத்துப் பதினைந்து பேர் இருப்பதாக ஒரு பொய்யான தோற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அப்போது திருடன் பயந்து ஓடி விடுவான்' என்று நினைத்தான்.

''டேய்! மயில்சாமி, ராமசாமி, பழனிச்சாமி, வேலுச்சாமி, சின்னசாமி, பெரியசாமி, ரங்கசாமி, கந்தசாமி எல்லோரும் எழுந்திரிங்க... சீக்கிரம் எழுந்திரிங்க. திருடன் வந்துட்டான். திருடன்... திருடன்.. அவனைப் பிடிங்கடா!'' என்று கூக்குரலிட்டுக் கொண்டே ஆட்டு மந்தைக்குள் புகுந்து, ஆட்களை எழுப்புவதுபோல ஆடுகளை உசுப்பி எழுப்பிவிட்டான்.

திடீரென அலறல் சத்தம் கேட்டதாலும், கந்தன் உசுப்பி எழுப்பிவிட்டதாலும் ஆடுகள் ஒன்றுக்கொன்று முட்டி மோதிக் கொண்டு, 'தடால், புடால்' என புழுதியைக் கிளப்பிக் கொண்டு எழுந்தன.

இருட்டில் சரியாகத் தெரியாததால், 'ஆட்கள்தான் அப்படி வேகவேகமாக எழுகிறார்கள்' என்று நினைத்து அரண்டுபோன திருடன், 'ஐயோ ஒர் ஆள்தான் இருக்கிறான் என்று நினைத்து ஏமாந்து வந்து விட்டோமே, இத்தனை பேர் இருக்கிறார்களே! இவர்களிடம் சிக்கினால் நம் கதி அதோ கதிதான்!" என்று பதறிக் கொண்டு பின்னங்கால் பிடரியில் பட எடுத்தான் ஓட்டம்.

அவன் ஓடுவதைப் பார்த்து கந்தனும் நிம்மதிப் பெருமூச்சுவிட்டான்.

அடுத்தநாள் பொழுது விடிந்ததும், இரவு நடந்த விஷயத்தைத் தன் சகாவான



சுப்பையன்

இன்னொரு திருடனிடம் கூறிக் கொண்டிருந்தான் தப்பி வந்த திருடன்.

"போடா போ! உன்னை அந்த ஆட்டுக்காரன் நன்றாக ஏமாற்றிவிட்டான். இன்று நான் போய் திருடிக் கொண்டு வருகிறேன் பார்!" என்று சவால்விட்டு, அன்று இரவு அவன் திருடச் சென்றான்.

வழக்கம்போல, கந்தன் ஆட்டு மந்தைக்குக் காவலிருந்தான். குளிர் அதிகமாக இருந்ததால் சுள்ளிகளைப் பொறுக்கி எரியவிட்டு அதில் குளிர் காய்ந்து கொண்டிருந்தான். நடுநிசி நேரத்தில், தூரத்தில் திருடன் வருவதைக் கந்தன் பார்த்துவிட்டான்.

'இன்றைக்கு வேறு ஏதாவது வழி பண்ண வேண்டும்' என்று நினைத்த கந்தன், தலையிலிருந்து கால்வரை தன் மேனி முழுக்க நன்றாகப் போர்த்திக் கொண்டு, கர்ண கொடூரமான குரலில் கத்த ஆரம்பித்தான்.

"எனக்கு இரத்தம் வேண்டும். எனக்கு

அகப்பட்டால் அதோ கதிதான்!



மனித இரத்தம் வேண்டும், சீக்கிரம் கொண்டு வாங்கடா.. பசிக்கிறது... மனித இரத்தம் வேண்டும்."

கந்தனின் பேய்க் குரல் திருடனின் வயிற்றில் புளியைக் கரைத்தது.

"ஆட்டுக்கிடா இரத்தம் வேண்டாம். எனக்கு மனுஷ இரத்தம் வேணும். ஒருத்தனோட இரத்தம் பத்தலை, இன்னொரு மனுஷனோட இரத்தம் வேணும், சீக்கிரம் வாடா... பக்கத்தில் வாடா.. டேய்... வா..."

அலறிக் கொண்டே, கந்தன் கைகளை விரித்துக் கொண்டு கோரமாக எழுந்து நின்றான். அதைப் பார்த்ததும் திருடனுக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த தைரியமும் போய்விட்டது.

'கண்டிப்பாக இது இரத்தக் காட்டேரிதான். ஆட்டுக்காரனைக் கொன்று இரத்தத்தைக் குடித்துவிட்டது. அருகில் சென்றால் நம் கதியும் அதோ கதிதான்' என்று தயங்கினான் திருடன்.

"ஏண்டா நின்றுவிட்டாய்? வா... அருகில் வா... என் பசியை ஆற்று... வா... வா..." என்று அழைத்துக் கொண்டே, கைகளை விரித்துக் கொண்டு திருடனை நோக்கி ஓடினான் கந்தன்.

'ஐயோ... இனிமேல் இந்தப் பக்கமே நான் வர மாட்டேன்... தலை தப்பினால் போதும்' என்று திருடன் திரும்பிப் பார்க்காமல் ஓடிவிட்டான்.




பரிசு ரூ.100/-


- லோ. தரணிகுமார், திருக்கழுக்குன்றம்

சேவல் எங்கே

பரிசு ரூ.50/-



- வி.விக்ரம், சென்னை



பரிசு ரூ.25/-

"சென்னைக்கு வந்த புதுசுல ஒரு கிழிஞ்ச பனியனோடு வந்தேன். இன்னிக்கு நாலு லட்சம் வெச்சிருக்கேன்."

"அடேங்கப்பா! அவ்வளவு கிழிஞ்ச பனியன் எப்படி சேர்த்தீங்க?"

- ஆர். சாரதா, சென்னை

பரிசு ரூ.15/-

தந்தை : ராமு நீ முதல் ரேங்க் எடுத்தால் சைக்கிள் வாங்கித் தர்றேன்.



ராமு : கவலைப்படாதீங்க டாடி. உங்களுக்கு அப்படியெல்லாம் செலவு வைக்கமாட்டேன்!


- நெ.இராமன், சென்னை

பரிசு ரூ.15/-

"எங்க குடும்பத்தில் நிறைய வெப் டிசைனர் இருக்காங்க."

"நீங்க சொல்லணுமா? வீடு முழுக்க ஒட்டடையைப் பார்த்தாலே தெரியுதே!"

- மீனா, சென்னை



பரிசு ஜோக்ஸ்!

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு!

செப்டெம்பர் இதழில் அறிவித்த போட்டியில் நிறைய பேர் கலந்து கொண்டு சரியான விடைகளையும் அளித்திருந்தனர். சரியான விடை அளித்தவர்களில் ஐந்து பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


பரிசு பெற்றவர்கள்:

1. சு. அபிராமி, ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, காயக்காடு.
2. வி.கே. ஆர்த்தி, ஏழாம் வகுப்பு, ஓ.சி.பி.எம். பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நரிமேடு, மதுரை.
3. ஆர். பூமிராஜன், ஏழாம் வகுப்பு, ஸ்ரீவித்யா மேல்நிலைப் பள்ளி, சேலம்.
4. பி. அகினோ ஜான்சிராணி, ஆறாம் வகுப்பு, அவிநாசிலிங்கம் உயர்நிலைப் பள்ளி, கோவை.
5. ரெ.சிவ அமிர்த நிவேதிதா, ஒன்பதாம் வகுப்பு, ஜேம்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, திருச்சி.

சரியான விடை

1. விஸ்வேஸ்வரய்யா - பிருந்தாவனம்
2. இத்தாலி - ரோம்
3. மா - மாஞ்சிப்ஃபெரோ இண்டிகா
4. கார்ல் லூயிஸ் - ஓட்டப் பந்தய வீரர்
5. டம்டம் விமான நிலையம் - கல்கத்தா
6. கட்டபொம்மன் - கயத்தாறு
7. கரையான் புற்று
8. டிஸ்னிலேண்ட்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.



பீஹார் மாநிலத்தில் ஒரு துறவி வாழ்ந்து வந்தார். அவர் உஞ்சவிருத்தி செய்து காலம் தள்ளி வந்தார். தனக்குக் கிடைக்கும் உணவில் அந்த வழியே வரும் ஒருவருக்கு வேண்டியதை அளித்துவிட்டுப் பிறகு மீதி இருப்பதை அவர் புசிப்பது வழக்கம். மீதி எதுவும் இல்லையெனில் அன்று முழுவதும் அவர் பட்டினிதான்.

தன் வினை...

ஒருநாள், அந்தத் துறவி ஒரு வயதான கிழவி வீட்டிற்கு உஞ்சவிருத்திக்குச் சென்றார். அந்தக் கிழவி மிகவும் பொல்லாதவள். எச்சில் கையால் காக்கா ஓட்டாத கருமி. வயதுக்கேற்ற விவேகம் இல்லாத சுயநலக்காரி. ஒரு தடவை அந்தத் துறவிக்குச் சிறிதளவு உணவே அளித்தாள். மற்றொரு நாள் வீணாய் போய்விட்ட பதார்த்தத்தைப் போட்டாள். மூன்றாவது தடவையாக வரும் துறவியைப் பார்த்து, 'இந்த சன்னியாசி இனிமேல் இங்கு வருவதையே நிறுத்தி விடுகிறேன், பார்' என்று மனத்தில் கெட்ட எண்ணம் எண்ணிக்கொண்டு உள்ளே சென்றாள். தயாரித்து வைத்திருந்த உணவில் சிறிது விஷத்தைக் கலந்து சன்னியாசிக்குப் போட்டாள். 'அப்பாடா, துறவி இனிமேல் இந்தப் பக்கம் தலை காட்ட மாட்டார், தொலைந்தார்!' என்று சந்தோஷப்பட்டாள்.

வழக்கம் போல், தன் இடத்துக்குத் திரும்பிய துறவி இறைவனைத் தியானித்து விட்டு உணவு கொடுக்கக் காத்திருந்தார். அவர் எதிரே வேலை முடித்து மிகவும் களைத்துப் போயிருந்த ஒரு மனிதன் வந்தான். உணவை அவனிடம் நீட்டினார். அவனுக்கோ நல்ல பசி. அவசரம் அவசரமாக ஒரு பருக்கை விடாமல் உண்டு முடித்தான்.

துறவிக்கு அன்று உணவு இல்லை. பட்டினி. துறவியிடம் உணவு சாப்பிட்டு விட்டு வீட்டிற்குச் சென்ற அவன் மயங்கி 'தடாலெ'ன்று அந்தக் கிழவியின் காலடியில் விழுந்தான். பதறிப் போனாள் அவள். மயங்கி விழுந்த தன் மகனை மருத்துவரிடம் வேகமாக அழைத்துச் சென்றாள். வைத்தியர்கள் அவன் சாப்பிட்ட உணவில் விஷம் என்று கூறி அவசர சிகிச்சை அளித்தனர். மயக்கம் தெளிந்த மகன் நடந்ததைக் கூறினான். கிழவிக்கு, துறவி தான் சாப்பிடும் முன்னர் யாருக்காவது உணவு கொடுத்துவிட்டுத் தான் சாப்பிடுவார் என்று தெரியாது. தன் கெட்ட எண்ணம் தனக்கே தீங்கு விளைவித்ததைப் புரிந்துகொண்டாள். மனம் வருந்தினாள். நடந்ததை மகனிடம் கூறினாள். துறவியிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டு நல்ல எண்ணத்துடன் திருந்தி வாழத் தொடங்கினாள் கிழவி.


- ஆர். சாரதா,
சென்னை.

அடங்கா பசி!

கதை : எம்.ஏ.உத்திரா, மதுரை
படம் : முத்து




நாட்கள் சென்றன. நந்தசேத்தனின் நண்பன் பக்கத்து நாட்டு மணிசடையர் என்ற அரசன். ஒருநாள்-
என் பிறந்த நாள் விழாவுக்கு நந்த சேத்தனை அழையுங்கள் அமைச்சரே!
அவர் அடங்காப் பசி நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்.
... அவரை நம்மால் திருப்திபடுத்த முடியாது.
என் நண்பன் அவசியம் வர வேண்டும். இது என் விருப்பம்.
மணிசடையரின் அழைப்பை ஏற்று நந்தசேத்தன் வந்தான். விருந்தில் -
என்ன ஆகப் போகிறதோ?
விருந்தினர் திருப்தி அடையணுமே!


நந்தசேத்தன் சாப்பிட ஆரம்பித்தான்.
என்ன அதிசயம்! இரண்டு வாய் சாப்பிட்டதும் பசி அடங்கி விட்டதே!
நண்பரே, சாப்பிடுங்கள்.
மணிசடையரே, என் அடங்காப் பசியை மருத்துவர்களால் கூட தீர்க்க முடியவில்லை. இங்கே இரண்டு வாய் சாப்பிட்டதும் பசி தீர்ந்துடுச்சே! என்ன காரணம்?
என் நாட்டு மக்கள் பட்டினி இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்...
... உன் நாட்டு மக்களின் பட்டினி சாபம்தான் உனக்கு இந்த நோயைத் தந்திருக்கிறது.
உண்மையை உணர்ந்து கொண்டேன். இனி மக்களுக்கு நல்ல அரசனாக இருப்பேன்.

தாகம்

இலங்கையில் அனுராதபுர மாவட்டத்தில் கடுமையான தண்ணீர் பஞ்சம் நிலவுகிறது. மழை இல்லாததால் பாசன ஏரிகளும், நீர் நிலைகளும் வற்றிவிட்டன. இதனால் காட்டு யானைகள் குடிநீர் தேடி நகருக்குள் வந்துவிட்டன. நகர மக்கள் யானைக் கூட்டத்தைப் பார்த்து, அலறி ஓடினர். யாரும் அவற்றிற்கு உணவோ, தண்ணீரோ அளிக்கவில்லை. இதனால் யானைகளுக்குக் கோபம் வந்து காவல் நிலைய சுவரை இடித்துத் தள்ளின.

பஸ்ஸை முந்திய வீரர்!

பத்தாயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் ஐரோப்பிய சாம்பியன் ஷேமா மார்ட்டினஸ். இவர் ஸ்பெயின் நாட்டில் மேட்ரிக் நகரில் பஸ்ஸைவிட வேகமாக ஓடி, குறிப்பிட்ட இடத்திற்கு முன்னதாகச் சென்றடைந்தார். பயணிகளை ஏற்றிக் கொண்டு அந்த பஸ் 3 கிலோ மீட்டர் தூரத்துக்குச் சென்றது. பஸ்ஸுடன் மார்ட்டினஸும் ஓடினார். போக்குவரத்து சிக்னலில் அவரும் நின்றார். ஆனால் பஸ் நிறுத்தத்தில் பஸ் நின்றபோது இவர் நிற்காமல் ஓடி மூன்று நிமிடத்திற்கு முன்பாக இலக்கை அடைந்தார். பஸ் போக்குவரத்தைப் பொதுமக்கள் அதிகமாகப் பயன்படுத்தவும், உலக தடகளப் போட்டிக்கு விளம்பரம் செய்யவும் இந்தப் போட்டி நடத்தப்பட்டது.

பிரமிடு ரகசியம்

எகிப்தில் உள்ள பிரமிடுகள் 4,500 ஆண்டு பழமை வாய்ந்தவை. இடி, புயல், மழை, வெயில் என எல்லாப் பருவத்தையும் தாங்கி இன்றும் நிலைத்திருக்கின்றன. கெய்ரோ அருகில் கிஸா என்ற இடத்தில் 145 மீட்டர் உயரம் கொண்ட மிகப் பெரிய பிரமிடு 13 ஏக்கரில் அமைந்துள்ளது.



கோகுலம் நிபுணர்

இந்தப் பிரமிடின் சுதவில் துளையிட்டு அதன் வழியே சிறிய காமிரா கொண்ட ரோபாட் அனுப்பப்பட்டது. பிரமிடின் ரகசியத்தை அறிந்து கொள்ள ஓர் ஆண்டுகாலமாகத் திட்டமிட்டு இந்த முயற்சியில் நிபுணர்கள் இறங்கியிருக்கின்றனர்.

ஓவியப் போட்டி

விழுதுகளோடு நிறைய இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ஆல மரத்தைப் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு : **ஆலமரம்.** ஆலமரத்தில் பறவைகள் அமர்ந்திருக்கலாம்; அணில்கள் ஓடி விளையாடலாம்; மனிதர்கள் மரத்தடியில் இளைப்பாறலாம். எப்படி வேண்டுமானாலும் உங்கள் கற்பனைத் திறனுக்கு ஏற்றவாறு ஓவியங்களை வரைந்து அனுப்புங்கள். ஓவியம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப் படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முகவரியை மறவாமல் குறிப்பிடுங்கள். கடைசி தேதி 6.11.2002.

வியக்க வைக்கும் விளையாட்டு உலகம்


"நீச்சல் கற்றுக் கொள்வது ஒன்றும் கஷ்டமான காரியமல்ல; நீச்சல் தெரியாதவனைத் தூக்கித் தண்ணீரில் தள்ளிவிட்டால் கையை, காலை உதைத்து தப்பிக்க முயற்சிக்கையில், நீச்சலையும் கற்றுக் கொள்ளலாமே!" என்று நீச்சல் தேசிய பயிற்சியாளர் முகுந்தனிடம் சொன்னபோது அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "நீங்கள் சொல்வது போல் அப்படி ஒருவரைத் தள்ளிவிட்டால் அதன்பின் தண்ணீர் அருகேயே அவர் வரமாட்டார். அதிலும் குறிப்பாக, சிறுவர், சிறுமியரை அது போல தண்ணீரில் தள்ளிவிட்டால், அதன்பின் பயத்தில் நீச்சல் குளத்தருகே எட்டிக் கூடப் பார்க்கமாட்டார்கள்" என்கிறார் முகுந்தன்.

அப்புறம் நீச்சல் கற்றுக் கொள்வது தான் எப்படி?

"அப்படி வாருங்கள் வழிக்கு. முதலில்









* முகுந்தன்

எதிர் நீச்சல்

தண்ணீரோடு ஸ்நேகம் செய்து கொள்ளுங்கள். ஸ்நேகம் என்றால் தண்ணியில் மணிக்கணக்காய் இருப்பதற்கான விருப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அதன் பின் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது மூச்சை அடக்கும் பயிற்சி. தண்ணீருக்குள் மூச்சுவிட முடியாதல்லவா! தண்ணீருக்குள் மூக்கால் மூச்சை இழுத்தீர்களென்றால், அதன்பின் மூளைக்குப் பாதிப்பு உண்டாகிவிடும். எனவே தண்ணீருக்குள் வாயால் மூச்சுவிடும் கலையைக் கற்றுக்





கொள்ள வேண்டும். 'ஐயோ... தண்ணீர் உள்ளே போய் விடுமே!' என்று பயப்படத் தேவையில்லை. தண்ணீர் தொண்டையைத் தாண்டிப் போகாது. இப்போது ஒருவர் வேகமாக நீச்சல் அடிக்கும் காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள். கையையும் காலையும் கொண்டு வேகமாக தண்ணீரை அடித்து, அந்த நபர்



போடலாமா?

முன்னேறும் அதே வேளையில் தலையைக் கவனியுங்கள். தண்ணீருக்குள் மூழ்கு வதும் அதன் பின் தலையை இருபக்கமும் சாய்த்து, சாய்த்து, தணீருக்கு மேல் தலையைத் தூக்குவதும் அதே சமயத்தில் வாய் திறந்திருப்பதும் தெரியும். நீச்சல் விளையாட்டில் முக்கியமானது மூச்சுப் பயிற்சி.

முதலில் தண்ணீரில் மிதக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு நீச்சல் குளத்தின் பக்கச் சுவர்களைப் பிடித்த படியே பயிற்சியால் கற்றுக் கொள்ளலாம். அதன் பின் கால்களைப் பயன்படுத்துவது, கைகளைப் பயன்படுத்துவது. கால்கள் + கைகள் என்று இரண்டையும் பயன்படுத்து வது, கால்களை அடித்துக் கொண்டே மூச்சு விடும் பயிற்சி, கைகளை அடித்துக் கொண்டே மூச்சு விடும் பயிற்சி, இந்த வகை இயக்கங்களோடு மூச்சுப் பயிற்சி. ஓ.கே. இப்போது நீங்கள் நீச்சலடிக்கத் தயாராகி விடுவீர்கள்.

லேடி ஆண்டாள் பள்ளியில் சிறுவர், சிறுமியருக்கு நீச்சல் கற்றுத் தருகிறார் முகுந்தன். ஆறு மாதக் குழந்தையாக இருக்கும் போதே தண்ணீரில் மிதக்கத் துவங்கிவிட்டாள் சிறுமி ஸ்ருதி மோல். இப்போது இரண்டரை வயதில் எட்டு வயது, பத்து வயது சிறுமியரோடு போட்டி போடுகிறார் ஸ்ருதி. எல்லோருக்கும் முன்னதாகவே பயிற்சிக்குத் தொப்பி, கண்ணாடியோடு தயாராகிவிடுகிறாள். ஒரு வருடமாக நீச்சல் கற்றுக் கொள்ளும் ஜானவி மீன்களுக்குச் சவால் விடும் வகையில் தண்ணீரில் சாகசம் செய் கிறாள். "பயிற்சி... பயிற்சி... கடுமையான பயிற்சி.. காலை, மாலை, இரு வேளையும் கட்டாயப் பயிற்சி. இதுதான் நீச்சலில் சாதனை படைக்கத் தேவையானது" என் கிறார் முகுந்தன். நீச்சல் வீரர் குற்றாலீஸ் வரனுக்குத் துவக்க காலத்தில் பயிற்சி கொடுத்தவர் இவர்தான்.

நீச்சலில் பலவித பிரிவுகள் இருக் கின்றன. Free style, Back stroke, Breast stroke, Butterfly என்று இருக்கும் இந்தப் பிரிவு களில் எதை சிறப்புப் பயிற்சியாக எடுப்ப தென்பதை உங்கள் திறமையைப் பார்த்து பயிற்சியாளர் தீர்மானிப்பார். கைகளையும் கால்களையும் பயன்படுத்தி நீச்சல் அடிப்பது, மல்லாந்து நீச்சல் அடிப்பது, கைகளை மட்டும் பயன்படுத்துவது, கால் களை மட்டும் பயன்படுத்துவது, தண் ணீருக்குள் தலையை முங்கி, முங்கி உயர்த்தி முன்னேறுவது ஆகியவை தான் இந்தப் பிரிவுகள். சிலருக்கு வேகம் இருக்கக் கூடும் அந்த வகையில் அவர் களை 50 மீட்டர், 100 மீட்டர் போட்டி களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். சிலருக்கு வேகம் இருக்காது. ஆனால் களைப்பாகாமல் நீண்ட நேரம் நீந்துவதற்கு சக்தி இருக்கும். அவர்களை 1000 மீட்டர், 1500 மீட்டர் நீச்சல் போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்யலாம்.

"உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? எல்லா விளையாட்டுகளிலும் உடலில் காயம்படும் ஆபத்து இருக்கிறது. ஆனால் நீச்சல் விளையாட்டில் காயம் படும் வாய்ப்பு மிக மிகக் குறைவு. அப்படியே காயம் ஏற்பட்டாலும் தொடர்ந்து தண் ணீரில் இருப்பதே அந்தக் காயம் ஆறு வதற்கு மருந்து" என்கிறார் முகுந்தன். நீச்சல் பயிற்சியை விரைந்து கற்றுக் கொள்ள இப்போது கிக்போர்டு, ஃப்ளிப்பர், புல்பாய் போன்ற சிறு உபகரணங்கள் இருக் கின்றன.

அது சரி கண்களுக்குக் கண்ணாடி எதற்கு? "குளோரின் கலந்த நீச்சல் குளத் தின் தண்ணீரில் நீண்ட நேரம் பயிற்சி

"நம்ம பூமி ஃபிரண்டு தீபாவளிப் பரிசா ராக்கெட்டைத் தபாலில் அனுப்பி வைச்சிருக்காரு; கொளுத்திப் பார்ப் போம்!"



பெறுவதால் கண்களைப் பாதுகாத்துக் கொள்ள கண்ணாடி. அது தவிர தண்ணீருக்குள் நன்றாகப் பார்க்கவும் முடியும்.''

''என்னுடைய இத்தனை வருட அனுபவத்தில் நான் ஒன்றை தெரிந்து வைத்திருக்கிறேன். நீச்சலில் சிறந்து விளங்கும் சிறுவர், சிறுமியர் படிப்பிலும் சக்கை போடு போடுகிறார்கள் என்பதே அது.''

ஆனால் முகுந்தனின் ஒரே கவலை. ஆர்வத்தோடு துவங்கும் சிறுவர், சிறுமியர் தொடர்ந்து பயிற்சிக்கு வராமல் போவது தான். ''அப்படி ஓரளவு தொடர்ந்து வருபவர்கள்கூட பின்னர், இன்ஜினியரிங், மெடிசின் என்று சேரும்போது, படிப்பின் ஆழத்தில் நீச்சலை விட்டு விடுகிறார்கள்'' என்கிறார் முகுந்தன்.

1896ம் வருடம் ஏதென்ஸில் நடந்த முதல் ஒலிம்பிக்ஸ் போட்டியிலேயே நீச்சல் போட்டிகள் இடம் பெற்றன. தடகளம் போன்றே நீச்சலும் மிகப் பழமையான விளையாட்டு. லிபிய நாட்டுப் பாலைவனப் பகுதியில் உள்ள வாடிசாரி குகை சுவர்களில், நீச்சலடிப்பது போன்ற காட்சிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவை கிறிஸ்து பிறப்பதற்கு முன் 9000 ஆண்டைச் சேர்ந்தவை என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். ஆனால் நீச்சல் விளையாட்டில் இந்தியா இன்னமும் சொல்லிக் கொள்கிற அளவு முன்னேறவில்லை. ஆசிய விளையாட்டில் நீச்சல் போட்டிகளில் பங்கெடுத்துக் கொள்ள இத்தனை பெரிய நாட்டிலிருந்து நான்கே பேர்தான் சென்றிருக்கிறார்கள். ஒலிம்பிக்ஸ் போட்டியில் ஒரே ஒருவர் அடையாள பங்கேற்பாகக் கலந்து கொள்ளச் செல்கிறார்.


''சின்னஞ் சிறிய நாடான தாய்லாந்தில் இருபதுபேர் கலந்து கொள்கிறார்கள். இத்தனைக்கும் நமது நாட்டில் நீச்சல் குள வசதிகளுக்குச் சற்றும் பஞ்சமில்லை. இன்று சென்னையில் பல பள்ளிகளில் நீச்சல் குளங்கள் இருக்கின்றன. பள்ளி, சிறுவர், சிறுமியரும் ஆர்வமாக பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். ஆனால் இது போதாது. நீச்சல் போட்டியில் 'நமது நாட்டுக்குப் பதக்கங்களை வாங்கித் தருவேன்' என்று உறுதி மொழி எடுக்க வைத்து நாடு முழுதும் 500 சிறுவர், சிறுமியரை முழுநேர நீச்சல் வீரர்களாகத் தயார் செய்ய வேண்டும். அப்போதுதான் சாதனை படைக்க முடியும்'' என்கிறார் முகுந்தன். இந்த விஷயத்தில் நிறைய எதிர் நீச்சல் போட வேண்டியிருப்பது நமக்குப் பளிச்சென்று புரிகிறது.

''நீச்சல் போட்டிகளில் சாதனை செய்வதைவிட, கடலில் நீச்சலடித்து ஜலசந்திகளைக் கடந்து சாதனை புரிவதில் சிலர் இறங்கிவிடுகிறார்கள். குற்றாலீஸ்வரன் உள்பட நமது நாட்டைச் சேர்ந்த ஆண், பெண் நீச்சல் வீரர்கள், வீராங்கனைகள் ஆங்கிலக் கால்வாய், ஜிப்ரால்டர், பாக் ஜலசந்தி ஆகியவற்றை நீச்சலில் கடந்து சாதனை புரிந்திருக்கிறார்கள். நீச்சல் போட்டிகளில் உயரே இருந்து டைவ் அடிப்பதிலும் பல பிரிவுகள் இருக்கின்றன. குதிக்கும்போது, ஒரு பல்டி, இரண்டு பல்டி அடிப்பது, 360 டிகிரி சுழன்று கொண்டே குதிப்பது போன்ற பல சாகசங்கள் உண்டு.

''இதையெல்லாம் பற்றி நமது வீரர்கள் நினைத்துப் பார்க்கக் கூட முடியாது.'' என்கிறார் முகுந்தன். ''நமது கிராமத்து சிறுவர், சிறுமியருக்கு இயல்பாகவே நீச்சல் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். அவர்களில் சிறந்தவர்களைக் கண்டு பிடித்து பயிற்சி கொடுத்தால் எதிர்காலத்தில் பதக்கங்கள் பெறும் வாய்ப்பு உண்டு'' என்கிறார் முகுந்தன்.

- ப்ரியன்

படங்கள் : **ராஜன்**




''நீ எதையும் சுத்தி வளைச்சு பேசுவாயாமே?''

''ச்சே... ச்சே... என்னாலே ஒரு குண்டூசியைக் கூட வளைக்க முடியாது. நான் எப்படி 'சுத்தி' வளைப்பேன்?''

- மு. நியாஸ், தஞ்சாவூர்

நிலவுக்குச் செல்ல...





வட்ட மான பந்து போல்
வான வெளியில் காணுதே!
கிட்டக் கிட்டத் தோன்றியும்
கைக்கு எட்டா திருக்குதே!

நின்றால் தானும் நிற்குதே!
நடந்தால் தானும் நடக்குதே!
எந்த இடத்தில் பார்க்கினும்
எழிலாய் வானில் தோன்றுதே!

ஓடும் போதும் கூடவே
ஓடி வந்து சேருதே!
ஆடும் போதும் கூடவே
ஆடி இன்பம் கூட்டுதே!

அந்த நிலவில் நாங்களும்
ஆடிப் பாடித் திரியவே
என்று போவ தென்றுமே
ஏங்கு கின்றோம், தரையிலே!

நிலவுப் பூமி நோக்கியே
நீண்ட தூரம் போய்வர
அனைவருக்கும் வாகனம்
அறிஞர் தரணும் விரைவிலே!


- புலேந்திரன்

Edited , printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Sub Editor: S. Sujatha
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual : 24 U.S. Dollars, Srilanka Rs.400/-

பத்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



பூனை எந்தப் பாத்திரத்திலிருந்து பாலைக் குடிக்கிறது?



விடை: 4

விடை: 1. சட்டை டிசைன், 2. தலைமுடி, 3. கிருதா, 4. விரல், 5. கால், 6. பேண்ட், 7. தண்ணீர், 8. வாளி, 9. வாளிக் கைப்பிடி, 10. சிறுவனின் கண்.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2002"
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 " Registered as a Newspaper in Srilanka